



கல்முனை NET
kalmunainet.com உண்மையின் முகம்
பரிமாணம் Parimanam
# பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்




இதழ்: 09 | பிலவ வருடம் சித்திரை 15 (30.04.2022 சனிக்கிழமை) | பக்கங்கள்: 18 | விலை: 70/=








# இடைக்கால அரசை உருவாக்க நிபுணத்துவ குழு நியமனம்

## மஹிந்தவுக்கு அழுத்தம்: பதவியை தொடர்வாரா? திங்களன்று இறுதித் தீர்மானம்

03

## இணைந்திருக்கும் காலிமுகத்திடலும் பிரிந்து நிற்கும் கல்முனையும்!

08



## அழிவடைந்து செல்லும் திருமங்கலாய் சிவன் கோவில்..!

07

## சிவராமின் 17ஆவது நினைவேந்தல்

09





## பொருளாதார பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு வழங்குவோம்

04






06

## ஒருமைப்பாட்டிலிருந்து ஓரமாகும் முஸ்லிம் அரசியலின் எதிர்காலம்



# “Gota Go Home...”

## 10 எழுத்து மந்திரம்



குணா

***Gota Go Home*** - சகல மக்களும் உச்சரிக்கும் 10 எழுத்து மந்திரம் இது. சுமார் 2 கோடி மக்களின் ஏகோபித்த இந்த கோஷம், இன்னும் பலித்ததாக தெரியவில்லை. பலிக்குமா? என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது.

69 இலட்சம் வாக்குகளால் தேர்வு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிதான் கோட்டாபய ராஜபக்ஷ. இலங்கை வரலாற்றில் அதிகூடிய வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்ற பெருமை இவருக்கு மட்டும் தான் இருக்கிறது.

அதே 69 இலட்சம் மக்களோடு நாடே திரண்டு **‘கோட்டா கோ ஹோம்’** என கோஷங்கள் எழுப்புகின்ற போது, முரண்டு பிடிக்கும் அரசியல் கோமாளியும் இவர்தான்.

நல்லாட்சியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஜனநாயகத்தை பாதுகாக்க களமிறங்கிய நாயகன் தான் இந்த கோட்டா.

30 ஆண்டு கால யுத்தத்தை முடித்தார்; மாற்றுக் கருத்தில்லை. சிங்கள மக்களின் ஏக தலைவன் என்ற நிலைக்கு இடம்பிடித்தார். பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் ஆயிரக்கணக்கான தமிழர்களை கொன்று அழித்தார். யுத்த முனையில் சரணடைந்தவர்கள் எல்லாம் காணாமல் போனார்கள்.

யுத்தத்தில் நொந்து சிதைந்து சின்னாபின்னமாகி போன தமிழர்களின் கண்ணீரும் கம்பலைக்கும் மத்தியிலும், தென்னிலங்கை மக்களின் ஒப்பற்ற நாயகனாக தான் இவர் திகழ்ந்தார்.

தமிழர்கள் பேராபத்தில் குற்றுயிராக முக்கி முனகிக் கொண்டிருந்த போது, பால் சோறும் இனிப்பும் மகிழ்ச்சி ஊர்வலங்களும் நடத்தி தென்பகுதி மகிழ்ச்சியின் உச்சத்தில் சஞ்சரித்தது. அந்த வேளையிலும் கோட்டாபய ராஜபக்ஷதான் அவர்களின் ஒப்பற்ற நாயகன். ஆனால், அதே தலைவனைத் தான் இன்று அதே மக்கள் வீட்டுக்கு போனா போதும் என்று ஆவேசமாக கோஷம் எழுப்புகின்றனர்.

மிரிகானையில் அவரது வீட்டுக்குச் சென்ற மக்கள் ஜனாதிபதியை வீ ட்டை விட்டு கூக்குரலிட்டனர். வெளியே வருமாறு அவரது மிரிகானை வீட்டுக்குச் சென்று வெளியே வருமாறு கூக்குரலிட்டனர். அதேநேரம் நாடு முழுவதும் எதிரான போராட்டங்களும் கோஷங்களும் நடத்தப்பட்டு கொண்டே இருக்கிறது.

முடியாத நிலையில் முற்றுகைப் போராட்டங்களும் நடத்துகின்றனர். இப்போது, ஜனாதிபதி செயலகம் முற்றுகைக்குள் இருக்கிறது. செயலகத்துக்கு செல்லமுடியாது தடுக்கப்பட்ட ஒரே ஒரு ஜனாதிபதி இவராகத்தான் இருக்க முடியும்.

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமும் மாணவர்களால் சுற்றி வளைக்கப்பட்டது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வீட்டினுள் இருக்கவில்லை என்பதே பிந்திக் கிடைத்த தகவலாகவும் இருக்கிறது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்து இருக்கின்றன. என்றாலும், இருவரும் பதவிகளில் இருந்தும் ஆசனங்களில் இருந்தும் அசைவதாக தெரியவில்லை.

**‘தன்னை அசைக்க முடியாது’** என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இருக்கிறார். **‘நான் பதவி விலகமாட்டேன் என்னை யாரும் பதவி விலக்கவும் முடியாது’** என்று அண்ணன் மஹிந்த ராஜபக்ஷ... அடம்பிடிக்கிறார்.

நெருக்கடிகளுக்கும் அழிவுகளுக்கும் பொறுப்பேற்று பதவி விலகிக் கொள்வது தான் தார்மீகம் மட்டுமல்ல, ஆட்சியின் அறமாகவும் இருக்கும். நாடு சீரழிந்து விட்டது. இனிமேலும், இழப்பதற்கு எதுவுமே இல்லை. இந்த நிலையிலும் தார்மீக பொறுப்பேற்று விலகிச் செல்வது தான் மக்களையும் ஜனநாயகத்தையும் மதிக்கும் மாண்பாக இருக்கும்.

அறுபத்தி ஒன்பது இலட்சம் என்ற மாயை இலக்கத்துக்குள்ளிருந்து ஜனாதிபதி கோட்டாபய இன்னும் மீளவில்லை. “அறுபத்தி ஒன்பது இலட்சம் மக்கள் என்னை நம்பி வாக்களித்திருக்கிறார்கள். என்னுடைய பதவிக்காலம் வரை அவர்களுக்காக பணியாற்றி விட்டு தான் ஓய்வு பெறுவேன்” என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். யதார்த்தத்தை இவர் இன்னும் புரிந்து கொண்டதாக இல்லை.

இவருக்கு வாக்களித்த மக்களே அவருக்கு எதிராக திரும்பியிருக்கிறார்கள். மதவாத, இனவாத உணர்வினால் தூண்டப்பட்டவை நீண்டகாலம் நிலைத்து நிற்காது என்பதற்கு, தற்போது இலங்கையின் அரசியல் உலகுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது.

> **அனைத்துக்கும் பொறுப்பேற்று பதவி விலகுவதுதான் அரசியல் அறம்**

கோட்டாபயவுக்கு எதிரான கோஷம் நாடெங்கும் மிகவும் ஆக்ரோசமாக ஒலிக்கின்றது. கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக **‘கோட்டா கோ கம’** என்ற பெயரில் போராட்ட களம் அமைத்து இளைஞர்களும் யுவதிகளும் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி காலிமுகத்திடலில் ஆரம்பமான போராட்டம் இன்றும் மக்கள் எழுச்சியுடன் தொடர்ந்தும் முன்னெடுத்து பட்டு கொண்டே இருக்கிறது. கோட்டாவுக்கு எதிரான கோஷம் விண்ணை பிளந்தாலும் அவர் அந்த இடத்திலிருந்து அசைவதாக இல்லை.

‘பதவிக் காலம் முடியும் வரை பதவியில் இருப்பேன்’ என்று அவர் கூறுவது அவரது அடம்பிடிப்பை புடம் போட்டு காட்டுகிறது.

நாட்டில் உள்ள சுமார் 2 கோடி மக்களின் மூச்சும் **“கோட்டா கோ ஹோம்”** என்றுதான் பேசுகிறது. **‘மக்கள் ஆணையைப் பெற்றுத்தான் ஜனாதிபதி ஆனேன்’** என்று கூசாமல் சொல்லும் கோட்டா , இந்த 2 கோடி மக்களின் ஒருமித்த கோஷங்களை ஏன் ஒரு ஆணையாக பார்க்காமல் இருக்கிறார்.

தன்னுடைய ஆட்சிக் காலத்தில் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதே செய்து இருக்கிறேன் என்று அடித்துத்தான் கூறுகிறார். ஆனால் நாடு எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு தானே காரணம் என்பதை இன்னும் அவர்கள் ஏற்றுக் கொண்டதாகவும் இல்லை; புரிந்து கொண்டதாகவும் இல்லை.

இன்னும் இவர் பற்றிச் சொல்லலாம் நேரம் தான் இடம் கொடுக்கவில்லை. நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிக்கும் அழிவுகளுக்கும் காரணம் யார்??? இவர் அப்படி கூறினால் நாட்டில் ஏற்பட்டுள்ள மக்களின் அவலத்திற்கு பொறுப்பு யாராக இருக்கும்...?

நாட்டுக்கு நன்மை செய்ததாக கூறும் ஜனாதிபதி இந்த சீரழிவுக்கும் பொறுப்பேற்க வேண்டும். உரம் தொடர்பாக எடுத்த திட்டம் வரவேற்கக்கூடியது. ஆனாலும் நடைமுறைப் படுத்துவதில் நாசம் விளைவித்து விட்டார்கள். அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தை நீக்கி 20 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து தனது அதிகாரத்தை வலுவாக்கி கொண்டவர் கோட்டாபய ராஜபக்ஷ. ஆகவே, அனைத்துக்கும் இவர் தான் பொறுப்பு என்பது உண்மை.

ஆகவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட இவர், அனைத்துக்கும் பொறுப்பு என்பது நிதர்சனம்.

பரிமாணம் கல்முனை NET kalmunainet.com உண்மையின் முகம்
Parimanam
பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
வெளியீடு: கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
எல்லை வீதி, கல்முனை 01.
kalmunainet@gmail.com | +94 76 2933026 | +94 77 3457915

# மாற்றம்தான் வேண்டும்

பொருளாதார நெருக்கடியையும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையையும் அரசியல் பிரச்சினையாக மாற்றும் கபடத்தனங்கள் இப்போது அரங்கேறத் தொடங்கி இருக்கின்றன.

பொருளாதார நெருக்கடியால் நாடு திணறிக் கொண்டிருக்கிறது. நிதி முகாமைத்துவம் முறையாக செய்யப்படாததால் ஏற்பட்டுள்ளதின் விளைவை, சகல மக்களும் இன்று அனுபவிக்கிறார்கள்.

இந்தப் பிரச்சனையின் மூலவரே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான் நன்றாகவே புரிகிறது. இதற்கு தார்மீகப் பொறுப்பு எடுத்து பதவியில் இருந்து விலகிச் செல்வதுதான் அரசியல் அறம்.

ஆனால், யார் எதிர்த்தாலும் பதவிக்காலம் முடியும் வரை ஆட்சியிலிருந்து தீருவேன் என்று அடம்பிடிக்கிறார்.

உரம் தொடர்பில் எடுத்த பிழையான தீர்வு நாட்டின் முதுகெலும்பை உடைத்திருக்கிறது. எரிபொருள் இல்லை; சமையல் எரிவாயு இல்லை; தொடரும் மின்வெட்டு நாட்டையும் மக்களையும் இருள் யுகத்துக்குள் தள்ளி விட்டுள்ளது. இதற்கு காரணங்கள் சொல்லி சும்மா தப்பிவிட முடியாது.

சமையல் எரிவாயு,மண்ணெண்ணெய், எரிபொருட்கள், அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் காலங்காலமாக இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இவைகளுக்கான கொடுப்பனவுகள் டொலரில்தான் செலுத்தப்பட்டன. ஆனால் அப்போது வராத பிரச்சினை இப்போது வருகின்றது என்றால் எங்கேயோ முகாமைத்துவத்தில் உள்ள பிரச்சனையாக தான் இது இருக்க வேண்டும். நெருக்கடி ஏற்பட காரணம் கொரோனா என்று சொல்வதை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

பொருளாதார நெருக்கடி அலைக்குள் சிக்கி, துயரின் உச்சத்தில் மக்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கும் போது, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியும் பாராளுமன்றமும் செயல்படும் விதம்,மிகவும் கேவலமாக இருக்கிறது. பாராளுமன்றத்தை தனது கைகளுக்குள் வைத்துக் கொள்வதற்காக ஜனாதிபதி எடுக்கின்ற முயற்சியும் இடைக் கால அரசு ஒன்றை உருவாக்குவதில் பாராளுமன்றம் படும் அல்லோலகல்லோலங்களும் மக்களின் அன்றாட பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் அமையவில்லை.

***‘Gota go home’*** என்ற கோஷம் வலுவடைந்து வரும் நிலையிலும், ‘காலம் முடியும் வரை போகவே மாட்டேன்’ என்று கூறும் கோட்டா புதிய அரசு ஒன்றை அமைக்குமாறு பாராளுமன்றத்தை பணித்தார்.

இது இன்று ஓர் அரசியல் நெருக்கடியாக உருவெடுத்திருக்கிறது. புதிய பிரதமர், புதிய அமைச்சரவையுடன் இடைக்கால அரசு அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி. இது தன்னை நோக்கி வந்த பந்தை பாராளுமன்றத்துக்குள் வீசியிருக்கிறார் ஜனாதிபதி.

இடைக்கால அரசின் பிரதமர் யார்? சர்வகட்சி அமைச்சரவையை எப்படி தீர்மானிக்க போகிறார்கள்? கட்சிகளின் நிலைப்பாடு என்ன ...? விடை தேடுவதற்கு பாராளுமன்றம் தயாராகிக்கொண்டிருக்கிறது.

மக்கள் வீதிக்கு இறங்கி ஒரு மாதத்தையும் கடந்த நிலையில், பாராளுமன்றம் எந்த தீர்வையும் எட்டவில்லை; எட்டுவதற்கான முயற்சிகளில் இறங்கவும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

பாராளுமன்றத்தின் சம்பிரதாய பூர்வமான அமர்வுகள் தொடர்ச்சியாக நடந்த போதும், கட்சி மோதல்களும் தனிப்பட்ட குரோதங்களுமே பேசப்பட்டன. ஆளும் கட்சியும் எதிர் தரப்பும் அடிக்கடி மோதிக்கொள்வது பாராளுமன்றத்தில் தினமும் நடக்கின்ற பணியாக இருக்கின்றது. இதனால், சபையை சபாநாயகர் ஒத்தி வைப்பது சாதாரணமாகி விட்டது. என்றாலும், எந்த முடிவும் எட்டுவதற்கு பாராளுமன்றம் தன்னை தயார் படுத்திக் கொள்ளவில்லை. இன்று வரை, பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் பாராளுமன்ற ஜனநாயகத்தை கேள்விக் குறியாக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து இருக்கிறது. கோட்டா வீட்டுக்கு போகவேண்டும்; அரசு மாற வேண்டும் என்பது தான் மக்களின் கோரிக்கை. கொழும்பு காலி முகத்திடல் போராட்டமும்,நாடு தழுவிய மக்களின் ஆர்ப்பாட்டங்களும் இதனைத்தான் வலியுறுத்துகின்றன.

ஆனால், மக்களின் இன்னல்களும் பொருளாதார நெருக்கடிகளும் மறக்கப்பட்ட நிலையில், அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் மாற்றப்பட்டிருக்கிறது என்பது தான் கவலைக்குரிய விடயமாகும்.

அரசியல் - ஆட்சியை மாற்றுவதா? அல்லது நிறைவேற்று அதிகாரத்தை வீட்டுக்கு அனுப்புவதா?- இவை இரண்டும் காய் நகர்த்தல்களாகவே தொடர்ச்சி 3ஆம் பக்கம்...

# இடைக்கால அரசை உருவாக்க நிபுணத்துவ குழு நியமனம்



## மஹிந்தவுக்கு அழுத்தம்: பதவியை தொடர்வாரா? திங்களன்று இறுதித் தீர்மானம்

பிரதமர் பதவியை தொடர்வதா? இராஜினாமா செய்வதா? என்கிற இறுதி தீர்மானத்தை மஹிந்த ராஜபக்ஷ விரைவில் எடுப்பார் என்று தெரிய வருகின்றது.

பெரும்பாலும் எதிர்வரும் திங்கட்கிழமை இறுதி தீர்மானத்தை அவர் அறிவிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்து கட்சிகளினதும் பங்கேற்புடன் இடை கால அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இணங்கி உள்ளமையே இதற்கான பிரதான காரணம் என்று அரசியல் வட்டாரங்களில் பரவலாக பேசப்படுகின்றது.

இடை கால அரசாங்கத்துக்கு புதிய பிரதமர் நியமிக்கப்படுவார் என்றும் இந்நிலைமை தற்போதைய பிரதமருக்கு பாரிய சவாலாக உண்மையிலேயே மாறி இருக்கின்றது என்றும் சுட்டி காட்டப்படுகின்றது.

இதே வேளை இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவது தொடர்பான செயல் திட்டங்களை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வேண்டுகோளை ஏற்று 05 பேர் கொண்ட திட்டமிடல் குழு நேற்று சனிக்கிழமை நியமிக்கப்பட்டு உள்ளது.

இதில் பிரதான பாத்திரத்தை வகிக்கின்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பாக நிமால் ஸ்ரீபால டீ சில்வா நியமிக்கப்பட்டு உள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்த சுயாதீன எம். பிகள் சார்பாக அநுர பிரியதர்ஷன யாப்பா நியமிக்கப்பட்டு உள்ளார்.

இதே போல 10 கட்சிகள் சார்பாக விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, ரிரான் அலஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிபுணத்துவ குழு இடைக்கால அரசாங்கம் தொடர்பாக பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளல்., கருத்துகளை செவிமடுத்தல், ஏனைய கட்சிகளின் ஆதரவை பெறுதல் ஆகிய முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் என்று அறிய கிடைக்கின்றது.

## இரகசிய ஆவணங்களை வெளியிடுவேன்

### அனுர குமார தகவல்



மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்க மே மாதம் 3 ஆம் திகதி இரகசிய ஆவணங்கள் சிலவற்றை வெளியிடப்போவதாக தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ குடும்பம் மற்றும் அமைச்சர்களின் ஊழல் மோசடிகள் தொடர்பான ஆவணங்களை பொதுமக்களிடம் அவர் முன்வைக்கவுள்ளதாக அவர் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே தனது ட்விட்டரில் நேற்றைய தினம் அவர் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த பதிவில் "உரிமையாளர்களும் கேட்டவர்களும் மே 3 ஆம் திகதி விழிப்புடன் இருக்கவும்" எனபதிவிட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

## ஹக்கீமுடன் பேசி செயலகத்தை தரம் உயர்த்துங்கள்

### அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் சுமந்திரனிடம் கேள்வி



ரவூப் ஹக்கீமுடன் பேசி கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினையை முதலில் முடித்து தர வேண்டும் என்று தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனுக்கு கல்முனையில் வெள்ளிக்கிழமை மாலை எதிர்ப்பு காட்டப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம். பி ஆகியோரின் கூட்டு தலைமையில் கோட்டா கோ ஹோம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆயினும் இதை பார்வையிட வந்த தமிழ் இளைஞர்கள் இருவரும் சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்யமுடியும்என்றால், ஏன்? கல்முனைவடக்கு பிரதேச செயலக பிரச்சினையை ஒன்றுபட்டு தீர்த்து தர முடியாது? ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புகின்ற பிரச்சினை ஒரு பக்கம் இருக்கட்டும், மிக நீண்ட கால பிரச்சினையான பிரதேச செயலக பிரச்சினையை முதலில் தீர்த்து தாருங்கள், 3 ஹக்கீமுடன் பேசி கணக்காளரை பிரதேச செயலகத்துக்கு சுமந்திரன் கொண்டு வந்து தர வேண்டும் என்று சத்தம் போட்டனர்.

இதனால் ஆர்ப்பாட்டத்தில் திடீரென்று வித்தியாசமான பரபரப்பு ஏற்பட்டது.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த வாரம் பாராளுமன்றத்தில்

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

குறித்த இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையானது தற்போதைய அரசாங்கத்தை ஆதரிக்கும் மற்றும் எதிர்க்கும் தரப்பினரை வெளிப்படுத்தும் என அவர் கூறியுள்ளார்.

எனவே எதிர்வரும் வாரம் நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் தீர்க்கமானதாக அமையும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி ஒரு இடைக்கால அல்லது சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒருபோதும் ஆதரவளிக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது போன்ற சூதாட்டத்தில் பங்கேற்க போவதில்லை என்றும் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கையில்லாபிரேரணையில்ஒப்பம்இடாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

பேரனை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் போதுநிலைமையைபார்த்துபிரதமர்யார்என்பது தீர்மானிக்கப்பட்டது பின்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ வாக்களிப்பது இல்லையா என்பதை தீர்மானிக்க என்று பரத் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்தார்.

"நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற போர்வையில் நாங்கள் இதற்குள் கொண்டு தலையை ஒட்டி கொள்ள விரும்பவில்லை. நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரும் தரப்பு நியாயமான தங்களுடைய நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும்.

அரசியல் தெளிவு ஒன்றில்லாமல் நாங்கள் ஒப்பம் இடுவதற்கு தீர்மானிக்கவில்லை" என்றார் சித்தார்த்தன்.

இதே நிலைப்பாட்டிலேயே தானும் இருப்பதாக சுமந்திரன் எம் பி பரிமாணத்துக்கு கூறினார்.

## மாற்றம்தான் வேண்... (ஆசிரியர்த் தலைப்பு...

இருக்கின்றன. பிரதமரை மாற்ற வேண்டுமென்றால் அண்ணன் தம்பி உறவும் பேசுகிறது. இங்கே, அரசியல் சிரேஷ்டத்துவமும் முதன்மை பெற்று நிற்கிறது. இந்த உணர்ச்சி அரசியலும் காய் நகர்த்தல்களும் மக்களின் நெருக்கடிகளுக்கு தீர்வு எட்டுவதை ஓரக்கண்ணால் பார்க்க வைத்திருக்கிறது.

இருப்பை தக்கவைக்க நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றமும் போடுகின்ற ஆட்டமும்,இழுபறி நிலையும் மக்களின் அவலங்களை புறந்தள்ளியே இருக்கின்றது.

அமைச்சரவையை மாற்றலாம். இதில் சிக்கல்கள் ஏற்படாது. பிரதமரை மாற்றுவதற்கு ஜனாதிபதிக்கு விருப்பமில்லை. பிரதமரை மாற்ற வேண்டும் என்பது நாட்டு மக்களின் ஏகோபித்த கோரிக்கையாகவும் இன்றும் கோஷங்களாகவும் எழுப்பப்பட்டு வருகின்றன. இந்த நேரத்தில், 'என்னை யாரும் மாற்ற முடியாது' என்கிறார் பிரதமர் மஹிந்த. அண்ணனை மாற்றும் மனநிலையில் ஜனாதிபதியும் இல்லை. இது குடும்ப உணர்ச்சி அரசியல்.

ஒரு நேர உணவுக்கு மக்கள் அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அரசியல் காய் நகர்த்தல்களும் சித்து விளையாட்டுக்களும் இவர்களுக்கு பழக்கப்பட்டுப் போன ஒன்றாக இருந்தாலும், மாற்றம் ஒன்றையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மாபெரும் தலைவர்களாக சிங்கள மக்களால் அரியாசனத்தில் வைக்கப்பட்டிருந்த, மஹிந்த ராஜபக்ஷவும் கோட்டாபய ராஜபக்ஷவும் இப்பொழுது மக்களால் நிராகரிக்கப்பட்ட, தலைவர்கள் என்ற அந்தஸ்துக்குள் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

நிறைவேற்று அதிகாரத்தையும் நாடாளுமன்றத்தையும் வைத்துக்கொண்டு, மாற்றங்களை ஏற்படுத்தி தங்களுக்குள் சரி செய்து கொண்டாலும், பிரச்சினைக்குத் தீர்வாக மாற்றம் ஒன்றே தேவை என்பது மக்களின் ஏகோபித்த கோஷமாக இருக்கிறது.

எனவே, மக்களின் கோரிக்கையை ஏற்று இரு தலைவர்களும் பதவி விலகாத வரை நாடு கொதிநிலையில் தான் இருக்கும்.

## றவூப் ஹக்கீமை பகிரங்க விவாதத்திற்கு அழைக்கிறார் நசீர் அஹமட்

சமகால மற்றும் கடந்தகால விவகாரங்கள் தொடர்பில் சமூகத்துக்கு தெளிவு வழங்க ஐக்கிய மக்கள் சக்தியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் றவூப் ஹக்கீமை, பிரபலமான தொலைக்காட்சி ஒன்றில் தன்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பதாவது,

நடந்தவற்றை உரியவாறு சமூகத்திடம் ஒப்புவிக்கும் பொறுப்பிலிருந்து நாமிருவரும் நழுவிவிட முடியாது. இதில், யார் குற்றவாளி அல்லது சுத்தவாளி என்பதையும் எவரது பொறுப்புக்கள் சமூகக் கடமைகளிலிருந்து நழுவியது என்பதையும் சமூகமே தீர்மானிக்க வேண்டும். இதற்காக ஒரு பகிரங்க விவாதம் நமக்குள் தேவைப்படுகிறது.

அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்துக்கு நான் உட்பட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், பைசல் காசிம், தௌபீக் ஆகியோர் ஆதரவளித்த பின்னணியுள்ள பின்புலம், நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் அவை இடம்பெற்ற இடங்கள் இன்னும் எழுமாந்த மான கதைகளாகவே உள்ளன.



இதன் உண்மைத்தன்மையை சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டிய தேவை உங்களுக்கும் எனக்கும் இருக்கும் என நம்புகிறேன். அதுமட்டுமின்றி ஆதார பூர்வமாகவும் முழு ஆவணங்களுடனும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடப்பாடு நமக்கு இருக்கிறது.

எனவே, இவ்வாறான விடயங்கள் நடப்பதற்கு ஏதுவான காரணிகள் ஏன் ஏற்பட்டது? என்பதை புலப்படுத்துவதும் நமது இருவரது பொறுப்புக்களில் உள்ளன.

ஆகவே, தன்னுடன் பகிரங்கமானதும், வெளிப்படையானதுமான விவாதத்துக்கு வருமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீமுக்கு அழைப்பு விடுக்கிறேன். இந்த அழைப்பை நிராகரிப்பதற்கான எந்த நியாயங்களும் அவரிடம் இருக்காது என, தான் நம்புவதாகவும் ஹாபிஸ் நஸீர் தெரிவித்துள்ளார்.



# பொருளாதார பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு வழங்குவோம்



## மனோவிடம் பிரதமர் தெரிவிப்பு

"இன்று நாட்டில் நிலவுவது பொருளாதார பிரச்சினைதான். எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்சினைகளுக்கு நாம் பொருளாதார தீர்வு வழங்குவோம். மக்களின் பொருளாதார பிரச்சினைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஒய்ந்து போய் விடும்.

அரசியலமைப்பு தீர்வு என்பது பெரிய விஷயமல்ல. அதனால் பொருளாதார பிரச்சினைகள் தீரப்போவதில்லை. 20ஆம் திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் சொன்னதும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மை தான். ஆனால், அதற்கு மேல் அதற்கு என்ன நடந்தது என எனக்கு தெரியாது. ஒருவேளை அது அமைச்சரவை உப குழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்பட தேவையில்லை. அது சாவகாசமாக வரும்போது வரட்டும். முதலில் மக்களின் பொருளாதார பிரச்சினைகளை நான் தீர்க்கிறேன். அப்போது இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நின்று விடும்'' என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனிடம் கூறியுள்ளார்.

நேற்றிரவு இருவருக்கும் இடையில் நிகழ்ந்த தொலைபேசி உரையாடலின் போது, அவர் இதனை கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் எம்பி ஊடகங்களுக்கு கூறியுள்ளதாவது;

நேற்றிரவு தொலைபேசியில், சபாநாயகர் மஹிந்த யாபாவிடம் பேசி விட்டு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தொடர்பு கொண்டு, "20ஆம் திருத்தத்தை அகற்றிவிட்டு, 19ஆம் திருத்தத்தை கொண்டு வருவதாக சொன்னீர்கள். அமைச்சரவையிலும் அனுமதி பெற்றதாகவும் சொன்னீர்கள். ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பிலும் நாம் அரசியலமைப்பு திருத்த வரைபை வழங்கியுள்ளோம்.

அதில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முழுமையாக அகற்றுவது பற்றி கூறப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கத்தின் வரைபுக்கே முதலிடம் கிடைக்கும். 20ஆம் திருத்தத்தை அகற்றும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் ஆதரவளிப்போம். முதற்கட்டமாக, 20ஐ அகற்றிவிட்டு, 19ஐ கொண்டு வருவதையும் நாம் ஆதரிப்போம்.

ஆகவே, நீங்கள் எப்போது உங்கள் சட்ட வரைபை பாராளுமன்றத்துக்கு கொண்டு வருகிறீர்கள்? இது பற்றி சற்றுமுன் சபாநாயகர் மகிந்த யாபாவிடம் பேசினேன். உங்கள் சட்ட வரைபு எப்போது சபைக்கு வரும் என்பது பற்றி, அவர் தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார்'', என்று கேட்டேன்.

> "அரசியலமைப்பு தீர்வு என்பது பெரிய விஷயமல்ல"

அதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, "இன்று நாட்டில் நிலவுவது பொருளாதார பிரச்சினைதான். எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்சினைகளுக்கு நாம் பொருளாதார தீர்வு வழங்குவோம். அரசியலமைப்பு தீர்வு என்பது பெரிய விஷயமல்ல. அதனால் பொருளாதார பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

20ஆம் திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் சொன்னதும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மைதான். ஆனால், அதற்கு மேல் அதற்கு என்ன நடந்தது என எனக்கு தெரியாது. ஒருவேளை அது அமைச்சரவை உபகுழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்பட தேவையில்லை. அது சாவகாசமாக வரும்போது வரட்டும்.

முதலில் மக்களின் பொருளாதார பிரச்சினைகளை நான் தீர்க்கிறேன்'' என்று கூறினார்.

"அரசியலமைப்பு திருத்தம் மூலம் நாட்டில் உடனடியாக இறுதி தீர்வு வராது என்பது எனக்கு தெரியும். ஆனால் நாட்டில் ஸ்திரத்தன்மை வருமே. அது தீர்வை கொண்டு வரும். இன்று மக்கள் நாடு முழுக்க போராடுகிறார்கள். அவதிபடுகிறார்கள். இது உங்களுக்கு பிரச்சினை இல்லையா?'' என திருப்பி கேட்டேன்.

"இல்லை, கவலை வேண்டாம் தம்பி..! மக்களின் பொருளாதார பிரச்சினைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்து போய் விடும். அதற்கு தான் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க போகிறேன். அப்புறம் பாருங்கள், இந்த போராட்டங்கள் எல்லாமே முடிவுக்கு வந்து விடும்'' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறி முடித்தார்.

20ஆம் திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாகவும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதாகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சொல்லி இருந்தாலும், இதற்கு அவர் முன்னுரிமை அளிக்கவில்லை என இப்போது தெரிகிறது.

நாட்டில் மக்கள் போராடுவது, உணவு, மருந்து, மின்சாரம், பெட்ரோல், எரிவாயு, உரம் போன்ற பொருளாதார தேவைகளுக்காகத்தான் என அவர் உறுதியாக நம்புகிறார்.

ஆகவே, அவற்றுக்கு தீர்வு கண்டால் இந்த போராட்டங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து விடும் என அவர் நம்புகிறார். இதற்காக அவருக்கு நட்பு நாடுகள் உதவும் எனவும் அவர் நம்புகிறார்.

ராஜபக்ஷ குடும்பத்தார் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல், வீணடிப்பு, தவறான நிதிக்கொள்கை போன்ற விடயங்கள் பற்றி அவர் எதுவும் கூறாவிட்டாலும்கூட, இவைபற்றிய போராட்டங்களையும் கூட அவர் முக்கியமாக கருதவில்லை என தெரிகிறது.

> பிரச்சினைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்து விடும்

இதுபற்றி நேற்றிரவு ஐக்கிய மக்கள் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாசவிடம் பேசினேன். இன்று ஏனைய எதிரணி கட்சி தலைவர்களிடமும் பேசவுள்ளேன். அனைத்து எதிரணி கட்சிகளும் தங்கள் செயற்பாடுகளை கூட்டிணைக்க வேண்டும் என விரும்புகிறேன்.

# வாழ்க்கையில் சாதிக்க கூடியவர்கள் யார்..?

எதை இழந்தாலும் தன்னம்பிக்கையை இழக்காமல் இருந்தால் இழந்த அனைத்தையும் மீண்டும் விரைவாக பெறமுடியும்.

விடாமுயற்சி, நேர்நிலை எண்ணம், தன்னம்பிக்கையுடன் நேர்மையாக செயற்படும் போது அபிவிருத்தி நோக்கி நகர முடியும்.

தோல்விகளை கண்டு துவண்டு போகாமல் தோல்விக்கான காரணங்களை அடையாளம் கண்டு அதனை வெற்றிக்கான படிகளாக மாற்றிகொண்டு செல்ல வேண்டும். வேரோட சாய்ந்த மரத்தை கூட வேற இடத்தில் நட்டு மரத்தை வளர்க்க முடியும்.

கசப்பான அனுபவங்களை கடந்து செல்லும் போது நிறைய விடயங்களை கற்றுக் கொள்ள முடியும்.

தனது மகனிடம் ஒரு தந்தை இரண்டு மரக் கன்றுகளை கொண்டு வந்து கொடுத்தார். அதில் ஒன்றை வீட்டுக்குள் ஒரு சட்டியில் நடவும், மற்றைய கன்றை வீட்டிற்கு வெளியேயும் நட சொன்னார்.

நட்டு முடிந்த பின் இதில் எது நன்றாக வளரும் என கேட்டார். இது என்ன கேள்வி வீட்டுக்குள் இருக்கும் மரம் தான் பாதுகாப்பாக இருக்கும். அதனால் அது தான் நன்றாக வளரும் என சொன்னான்.

சில நாட்கள் கழிந்த பின்பு மீண்டும் மகன் தந்தையிடம் வந்தான். நான் சொன்னபடி வீட்டுக்குள் நட்ட மரம் தானே நன்றாக வளர்ந்துள்ளது என கூறினான்.

வீட்டுக்கு வெளியில் நட்ட மரக்கன்றை பார்க்கும் படி தந்தை கூறினார். அந்த மரகன்று உயர்ந்த மரமாக வளர்ந்துள்ளது. இந்த மரத்திற்கு தேவையான அளவு சூரிய ஒளி, மழை நீர், கூட்டெருக்கள் போன்றன போடப்பட்டுள்ளன.

இதேபோல தான் பல்வேறு அனுபவங்களை கடந்து வந்தவர்கள் தான் வாழ்க்கையில் சாதிக்க முடியும்.

# பதறிப் போகும் அன்றாட வாழ்வு

## எதிர்வு கூறமுடியாத நிலையில் மக்களும் அரசும்



ஏ. எல். எம். அஸ்லம் PhD
பொருளியல் நிபுணர்

இலங்கையில் அடுத்து நடக்கப்போவது என்ன என்பதனை எதிர்வுகூற முடியாத நிலையில் மக்களும் ஆட்சியாளர்களும் காணப்படுகின்றனர்.

ஏனெனில், மக்கள் எப்போது பொருட்களின் விலை அதிகரிக்கும், மின்சாரம் மற்றும் குடிநீர் எப்போது நிறுத்தப்படும் எனப்பதறிப்போய்இருக்கும்போது, அரசாங்கம் மக்களின் அன்றாட வாழ்வுக்கேனும் வசதியேற்படுத்தாமல், நாளாந்தம் செயற்கையான பொருட் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலைகளை உயர்த்துவது மற்றும் மின்சாரம், குடிநீர் போன்றவற்றை நிறுத்துவது என மக்களுக்கு சுமைகளை ஏற்படுத்திய வண்ணம் உள்ளது.

அதாவது ஒரு அரசின் பிரதான கடமைகளில் ஒன்றான 'சமூக நலனோம்பு' என்ற விடயத்தினை இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் விலத்தியே தமது அரசினைக் கொண்டு செல்கின்றனர் என்ற அளவிற்கு இலங்கையும் அதனுடைய தற்போதைய ஆட்சியாளர்களும் சர்வதேச அரங்கில் மிகவும் கீழ்த்தரமாக போய்விட்டனர்.

*2005ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ குடும்பம் மற்றும் அவர்களின் சகோதரர்கள் 2015ஆம் ஆண்டு வரையில் தம்மை மக்கள் மத்தியில் ஒரு பெரும் சக்தியாகவும் தம்மால் முடியாதது என்று ஒன்றுமில்லை என மக்களைப் பயமுறுத்தி ஆட்சி நிர்வாகத்தை கொண்டு செல்கின்றனர்.*

**'பனை மரத்தில் காகமும் குந்த பனம் பழம் விழுந்த கதையாய்'** தெற்காசியப் பிராந்தியத்தில் மிகப் பெரிய பலம் பொருந்திய நாடான இந்தியாவை, ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியின் தலைவர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டதற்கு பழிதீர்க்க எடுத்த முயற்சியில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டனர். அதனையே தனக்குச் சாதகமாக்கி, தம்மால்தான் விடுதலைப் புலிகள் அழிந்தனர் என்று மார்பு தட்டிய ராஜபக்ஷக்கள், தற்போது மக்கள் மத்தியிலும் சர்வதேச அரங்கிலும் தாங்கள் ஓர் புஸ்வானம் என்பதனை நிரூபித்துவிட்டார்கள்.

> **"மக்கள் புரட்சியை மதிக்காவிட்டால் அவமானப்பட்ட ஆட்சித்துறப்புக்கு வழிவகுக்கும்"**

பொதுவாக, அரசு நடுநிலைத்தன்மை வாய்ந்ததாகக் காணப்பட வேண்டும் என்று அரசியல் விஞ்ஞானம் வியாக்கியானம் கூறுகிறது. ஆனால், தற்போதைய ஜனாதிபதி தான் அறுபத்து ஒன்பது இலட்சம் பௌத்த மக்களால் தெரிவு செய்யப்பட்டவன் என்று இலங்கை வரலாற்றில் எந்தவொரு ஜனாதிபதியும் வெளிப்படையாகக் காட்டாத இனவாதத்தினை நாளாந்தம் பொது நிகழ்வுகளில் தூவி, சிங்கள மக்களை உசுப்பேத்தினார்.

இஸ்லாமியர்களின் புனித கடமைகளில் ஒன்றான ஜனாஸா நல்லடக்கத்தினை கொச்சைப்படுத்தி அவர்களைக் கேவலப்படுத்தும் முகமாக இஸ்லாமியர்களால் வெறுக்கப்படும் எரியூட்டலை தொடர்ந்து நடத்தினார்கள்.

ஜனாசாக்களை எரித்து ஒருவருட பூர்த்தி தினமான அன்று, ஜனாதிபதியின் இல்லம், ஆட்சிப்பீடம் ஏற்றப்பட்டவர்களாலேயே கல்லெறிக்கு உள்ளானது.

எனவே, இலங்கையில்- 'மதவாதம் என்பது ஓர் உணர்ச்சியோடு சம்மந்தப்பட்ட குறுங்கால ஞாபகக் கோட்பாட்டைச் சார்ந்தது' என்பதனை மக்கள் நிரூபித்துள்ளனர்.

மறுபுறம் நியுட்டனின் மூன்றாம் விதி கூறுவது போல, ஒரு தாக்கத்திற்கு மறுதாக்கம் உண்டு என்பதனை தற்போதைய இலங்கை நிலைவரம் நிரூபித்துள்ளது.

கொத்து ரொட்டியில் மலட்டு மாத்திரை, முஸ்லீம்கள் ஐ. எஸ் தீவிரவாதிகள், தமிழர்கள் வடக்கு-கிழக்கை இணைக்க முயற்சிக்கின்றனர் போன்ற அடிப்படையற்ற கோஷங்களை விதைத்து, ஆட்சிபீடம் ஏறிய அரசு, அதன் எதிர்தாக்கத்தை அனுபவிக்க ஆரம்பித்துள்ளது.

பொதுவாக மனித சமூகம் பசி மற்றும் உணர்வுக்குக் கட்டுப்பட்டவர்கள். இவற்றில் முதலில் ஆட்கொள்வது உணர்வு. எனவே, உணர்வில் கை வைக்கும்போது தற்காலிக ஞாபகக் கோட்பாட்டினூடாக அது மக்களை திடீர் முடிவுகள் எடுப்பதற்கு இட்டுச் செல்லும். அதன் அடிப்படையிலேயே தற்போதைய ஜனாதிபதி இனவாத உணர்ச்சியைத் தூண்டி ஆட்சி ஏறினார். ஆனால், இரண்டாவது விடயமான பசி என்னும் நீண்டகால ஞாபகக் கோட்பாட்டை மறந்துவிட்டார்.

மக்களை தொடர்ந்தும் உணர்ச்சிக்குள் ஆட்கொள்ளலாம் என நினைத்த அவருக்கு, பிச்சைக்காரனுக்கு போலிவேசம் ஏற்படுவதுபோல, இருந்த அனைத்து டொலர்களையும் கடனை அடைக்கிறேன் என தனது பக்கட்டை நிரப்பிவிட்டு தற்போது ஒரு டொலரேனும் இல்லாமல், நாட்டு மக்களை பஞ்சத்தில் தள்ளிவிட்டுள்ளார்.

இந்த நிலையில், அழுங்குப்பிடியாய் நான்தான் ஜனாதிபதி என்று நாட்டை ஆட்சி செய்கிறார். எனவே, மக்களுக்கு இரு வழிகளில் தம் உயிர்களை காத்துக் கொள்ள முடியும்.

அதாவது, டார்வினின் கூர்ப்புக் கொள்கையில் குறிப்பிடுவதுபோல, 'தக்கன உயிர்வாழ்தல்; மற்றும் தாவி உயிர்வாழ்தல்'.

இலங்கையைப் பொறுத்தவரையில் தாவி உயிர்வாழ்தல்; என்பது அரசினால் வழங்கப்பட வேண்டும். ஆனால் அதற்கு ஒருசதவீதமேனும் சந்தர்ப்பம் இல்லை. மாறாக, தக்கென உயிர்வாழ்தல் என்பது மக்கள் தம்மிடமுள்ள குறைந்தபட்ச பலத்தை அரசுக்கு எதிரான செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தி, தமது உயிரைக் காத்துக் கொள்ள முயற்சிப்பர். இதுவே தற்போது இலங்கையில் மக்களால் நடாத்தப்படுகின்ற மக்கள் புரட்சியின் அடிப்படையான, ஆர்ப்பாட்டம் மக்கள் எதிர்ப்புப் பேரணிகளாகும்.

இதனை அரசாங்கம் தெளிவாக விளங்கினால் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உயிரிழப்புகள் அவமானப்பட்ட ஆட்சித் துறப்புக்கள் என்பனவற்றை தவிர்த்துக் கொள்ள முடியும். மறுபுறம் மக்கள் மத்தியில் இன்று வரையில் விடைதெரியாத கேள்வியொன்று உள்ளது.

அதுவே கொவிட் 19க்கு இலங்கை ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட நிதியத்திற்கு வழங்கப்பட்ட அன்பளிப்புக்கு என்ன நடந்தது? அதனை ஏன் அரசு டொலராக மாற்றிக் கொள்ளவில்லை? போன்ற வினாக்களும் உள்ளன என்பதனை இவ்விடத்தில் ஞாபகப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.



# ஒருமைப்பாட்டிலிருந்து ஓரமாகும் முஸ்லிம் அரசியலின் எதிர்காலம்







## ராஜபக்ஷக்களின் முஸ்லிம் விரோத போக்குகள் அரசியல் முதலீடுகளாகவே இருந்தன

நிப்ராஸ்

நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய அரசியல் நெருக்கடிக்குள் முஸ்லிம் தலைமைகளின் எதிர்காலம் எப்படியிருக்கப் போகிறது என்பதுதான் இன்றைய பேசுபொருள். முஸ்லிம் அரசியல் களத்தில், காலூன்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சமூக விடுதலை, தனித்துவம் மற்றும் உரிமை முழக்கம் என்பன திரைமறைவில் ஏலமிடப்பட்ட அல்லது விலைபேசப்பட்ட விவகாரங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளதால் மக்கள் பெரும் வியப்பில் ஆழ்ந்துள்ளனர். இவையனைத்தும் தங்களது கட்சி எம்பிக்களால் வெளிப்படுத்தப்படுவது தான், தலைமைகளுக்கு ஏற்பட்டுள்ள பெருஞ்சிக்கல். ராஜபக்ஷக்களை மிக மோசமாக விமர்சித்து சமூக உணர்ச்சிகளைத் தூக்கிப்பிடித்து வாக்குபெற் ற இந்த முஸ்லிம் தலைமைகள், நேர்மையாக நடந்திருக்கிறதா?

இதைத்தான் முஸ்லிம்கள் சிந்திக்கின்றனர். குளிப்பாட்டுதல், கபனிடல், தொழுவித்தல் மற்றும் நல்லடக்கம் செய்தல் ஆகிய நான்கு ஜனாஸாக் கடமைகளைக் கூடக் கிள்ளியெறிந்து, இஸ்லாத்தின் கௌரவத்தை மலினப்படுத்திய மத நிந்தனையாளர்களாகவே முஸ்லிம் தலைமைகள் இந்த ராஜபக்ஷக்களை படம்பிடித்துக்காட்டின. பள்ளிவாசல்களை உடைத்தமை, முஸ்லம் ஷரீஆச் சட்டத்தில் கை வைத்தமை இன்னும் எத்தனையோ சமய விடயங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தில் இடமில்லை என்ற ஒரு கருத்தியலையும் நன்றாக விதைத்ததும் இந்த தலைமைகள்தான். இதில், தேசிய காங்கிரஸ் மாத்திரம் விதிவிலக்கு என்பதையும் வாசகர்கள் விளங்கலவசியம்.

அரசியல் விவகாரங்களில் முஸ்லிம்களை போதியளவில் நம்பிக்கையூட்டும் திராணியை இழந்திருந்த இத்தலைமைகளுக்கு, ஒரு வகையில் ராஜபக்ஷக்களின் இந்த முஸ்லிம் விரோத போக்குகள், அரசியல் முதலீடாகவே இருந்தன. தனி மாகாணம், முஸ்லிம் நிர்வாக அலகு உள்ளிட்ட எந்த விடயங்களிலும் இந்த தலைமைகள் போதியளவுக்கு முஸ்லிம்களை நம்பிக்கையூட்டவில்லை.

இதற்கு காரணங்களும் இருந்தன.எந்த விடயத்தில் முஸ்லிம்களை அரசியல் மயப்படுத்த வேண்டுமென்பதில், இத் தலைமைகளுக்கு இருந்த தடுமாற்றங்களே இதற்கான பிரதான காரணங்களாகும். இன விடுதலையை வட, கிழக்கிற்குள் மட்டுப்படுத்துவதா? இல்லை தேசியளவில் ஒன்றிணைப்பதா? என்பது பூகோள அரசியல் ஏற்படுத்தும் பிரச்சினையாகவே இக்கட்சிகளுக்கு இருக்கிறது.

கிழக்கில் முஸ்லிம்களுக்காக பேசப்படும் ஒரு விடயம், தெற்கில் முஸ்லிம்களுக்கு ஆபத்தாகவும், எச்சரிக்கையாகவும் இருக்கும் யதார்த்தங்களை உணர்ந்த முஸ்லிம் தலைமைகள் இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்ப முஸ்லிம் அரசியலைக் கையிலெடுத்துள்ளன.

இந்த கட்சிகள் முஸ்லிம்களின் வாக்குகளில் மட்டும் தங்கியிராததுதான் இந்நிலையை ஏற்படுத்திவிட்டது. கிழக்கில் முஸ்லிம் பிரச்சினை ஒன்றுக்கு குரல் கொடுத்ததால், வன்னியில் தமிழ், சிங்கள வாக்குகளை இழக்கும் நிலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு இருக்கிறது. அம்பாரை மாவட்டத்தில் தனி முஸ்லிம் அலகு கோரினால், மாவனல்லை, கேகாலை உள்ளிட்ட தென்பகுதியில் சிங்கள வாக்குகள் மட்டுமல்ல முஸ்லிம்களின் வாக்குகளையே இழக்கும் நிலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கிறது.

இதனால், ராஜபக்ஷக்களின் இந்த மத விரோதப் போக்குகள் அல்லது பௌத்த கோட்பாட்டிலான சிந்தனைகளுக்கு எதிராக, முஸ்லிம்களை ஒன்றிணைக்க இக்கட்சிகளுக்கு ஏதுவாகப்போனது. இதற்காக, இத்தலைவர்களின் ஆளுமைக்கான அங்கீகாரமாகவும் முஸ்லிம்களின் ஆதரவை கணிக்க முடியாது. அடியறுந்த மரம்போல அல்லது அறுத்தெறிந்த கொடிபோல தமது மத நம்பிக்கைகள் செல்வதைப் பாதுகாப்பதற்கே, இத்தலைமைகளுக்கு வாக்களித்தனர் முஸ்லிம்கள். ஆனால், இதுவும் அர்த்தமற்றிருப்பதற்கான அடையாளங்கள், ஆதாரங்கள் கண்ணூடாகக் கிடைத்து வருவதால், “யாரை நம்பி நான் பிறந்தேன்... போங்கடா போங்க...” என்ற பரிதாபத்துக்கு முஸ்லிம்களின் அரசியல் வந்திருக்கிறது.

இன்று நாடளாவிய ரீதியில், ராஜபக்ஷக்களுக்கு எதிராக எழுந்துள்ள அலையில் அமோக ஆதாயம் அடையும் சந்தர்ப்பங்களையும் இந்த முஸ்லிம் தலைமைகள் இழக்கும் நிலைமைக்கு வந்திருப்பதாகவே அங்கிருந்து வரும் ஆரூடங்கள் சொல்கின்றன.

அரசியலமைப்பின் இருபதாவது திருத்தம், பஷில் ராஜபக்ஷவின் இரட்டைப் பிரஜாவுரிமைக்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்பிக்கள் பற்றி உச்சளவில் ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் இன்று, இதற்குப் பின்னால், இத்தலைமைகளும் இருந்திருக்கிறதா? என்ற ஏமாற்ற விரக்தியிலுள்ளனர். எதிர்வரும் காலங்களில் வெறுமை அரசியலாகவே இவை, பார்க்கப்படப்போகிறது.

அதாவது, சமூக ஒருமைப்பாடு இழக்கப்பட்டு, வெறும் பிரதேசவாத அரசியல்தான் தழையெடுக்குமோ? தெரியாது. இது, பிரதேசத்துக்கு ஒரு எம்பியைப் பெற்றால் போதும் என்ற குறுகிய மன வளர்ச்சிக்கு வித்திடப்படலாம். இவ்வாறு வித்திடப்படுவது, அபிவிருத்தி அரசியலை நோக்கிய சமூகமாகவே முஸ்லிம்களை நகர்த்தப்போகிறது.

இந்நகர்தல்களால், இன்னுமொரு சிறுபான்மைக்கு பலம் கிடைக்கும் என்றும் சிலர் நினைக்கலாம். அவ்வாறு நினைப்பது இவ்விடத்தக்குப் பொருந்தாது. ஏனெனில், முஸ்லிம் அரசியலின் தயவு,தேவைப்பட்ட போதெல்லாம் தமிழ் தரப்புக்கு அவை கிடைக்கவில்லை. இன்றளவும் சில சந்தர்ப்பங்களில் தமிழரும் முஸ்லிம்களும் ஒன்றிணைய நேர்வது ஒரே இலட்சியத்திலல்ல. சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரானவர்கள்தான் இந்த ராஜபக்ஷவினர் என்ற பொது மைப்பாடே இவர்களை இணைக்கிறதே தவிர, அரசியல் இணக்கப்பாடுகளல்ல.

தமிழர்களுக்கு அரசியலில் பிரச்சினை, முஸ்லிம்களுக்கு மத பிரச்சினை அவ்வளவு தான். எனினும், இன்றைய நிலவரங்களில் முஸ்லிம் தலைமைகளுக்கு இது, ஆபத்தானது தான். காரணம், சர்வதேசத்தின் கவனங்கள் இலங்கையை நோக்கி குவிகையில், முஸ்லிம் அரசியல் ஒரு மைப்படாது இருப்பது பலவீனமில்லையா? உச்சக்கட்ட பொருளாதார வீழ்ச்சியில் இந்நாடு உழல்கையில் தொழில்வாய்ப்பு அல்லது அபிவிருத்திகளை எதிர்பார்ப்பது இன்னும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தும்.

**உரிமை முழக்கங்கள் விலை பேசப்பட்ட விவகாரத்தால் முஸ்லிம்கள் அதிர்ச்சி**





# அழிவடைந்து செல்லும் திருமங்கலாய் சிவன் கோவில்..!

## கவனம் எடுப்பார்களா ? தமிழ் அரசியல்வாதிகள்





திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியாரப்பற்றிலுள்ள சைவக் கிராமம் கிளிவெட்டி ஆகும். கிளிவெட்டியிலிருந்து ஒன்பது கிலோமீற்றர் தூரத்தில் மீன்சார வேலி போடப்பட்ட அடர்ந்த காட்டின் மத்தியில் “திருமங்கலாய்” என்ற வரலாற்றுப் பழமைவாய்ந்த இடத்தில் ‘திருமங்கலாய் சிவன் கோயில்’ அமைந்துள்ளது.

இவ்விடத்திற்குச் செல்லும் பாதையில் பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் யானைகளின் நடமாட்டத்தை எதிர்கொள்வது சாதாரண நிகழ்வாகவே இருக்கின்றது.

இந்நிலையில், திருமங்கலாய் பகுதியில் வாழ்ந்த மூதாதையினரின் வழித்தோன்றல்கள் கிளிவெட்டியில் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது இக்கோயிலின் பெரும் பகுதி முற்றாக அழிவடைந்து அதன் அழிபாடுகள் ஆங்காங்கே கற்குவியல்களாக காணப்படுகின்றன. ஆயினும், இக் கோயிலின் கட்டிட அமைப்பையும் அதன் கலை மரபையும் கோயில் தோன்றி வளர்ந்த காலத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய நம்பகரமான ஆதாரங்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது.

கருங்கற்களையும் செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்ட இக் கோயிலின் கர்பக்கிரகமும் அதன் மேலமைந்த விமானமும் முற்றாக அழிவடைந்து அதன் கட்டிடப் பாகங்கள் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன. மற்றும் கோயில் கட்டிடங்களும் அத்திவார மட்டத்தில் சிதைந்து மண்ணில் மறைந்து கிடக்கின்றன.

அத்திவாரம் பெரும் கருங்கற்களால் அமைக்கப்பட்டிருக்கின்றது, இவற்றையெல்லாம் பார்க்கும் போது இங்கு ஒரு பெருங்கோயில் இருந்ததற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன.

ஆலயங்களுக்கு தலபுராணம் பாடப்பட்டிருக்குமானால், அந்த ஆலயம் மிகவும் பிரசித்தியும் மகத்துவமும் வாய்ந்ததாக இருக்க வேண்டும். என்ன காரணத்தினால் இவ்வாலயம் அழிந்ததென்பது தெரியவில்லை. ஆனால், ஆலயத்திற்குரிய தலபுராணம் உயிரோடிருக்கின்றது.



கொட்டியாபுரப்பற்றிலுள்ள பல ஆலயங்களில் திருக்கரைசைப் புராணம் இன்றும் படிக்கப்பட்டு வருகின்றது.

திருமங்கலாய் சுவாமி பெயர் சுந்தரலிங்கேஸ்வரர், திருமங்கலாய் சிவன் கோவிலில் இருந்து சுவாமி எழுந்தருளிச் சென்று மகாவலி கங்கையில் ஆடியமாவாசியன்றும், மகர மாதத்திலும் தீர்த்த மாடுவார்.

ஆலயம் அழிந்து வரும் நிலையில் பின்னர் இந்த வழமையின் படி கங்குவேலிச் சிவன் மகாவலி கங்கையில் தீர்த்தமாடி வருகின்றனர்.

திருமங்கலாய் சிவன் கோவிலுக்குரிய திருக்கரைசைப் புராணம் இவ்வாலயத்தின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றது. இலங்கையின் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மன்னர்கள் பன்னெடுங் காலத்திற்கு முன்பே ஆண்டு வந்துள்ளார்கள் என்பதை திருக்கரைசைப் புராணம் கூறுகின்றது.

இந்திய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சிங்கபூதரன் என்பவன் அயோத்தியிலிருந்து இலங்கைக்கு வந்தான். தற்போதும் இலங்கைத்துறை என்று சொல்லப்படுமிடத்தில் கப்பலில் வந்திறங்கினான். அப்போது இப்பிரதேசத்தை ஆண்டு கொண்டிருந்தவன் எழில் வேந்தன். இவனுடைய மகள் திருமங்கை. திருமங்கையைச் சிங்கபூதரன் திருமணம் செய்து திருக்கரைசையம்பதியில் அரண்மனையமைத்து நாட்டையாண்டு வந்தான்.

அரண்மனை அமைத்த இடத்திற்கு இரணியன் குன்று என்று பெயர். இப்பெயர் இன்று திரிபுபட்டு ‘இரணியன் கொட்டு’ என்று வழங்கி வருகின்றது. இந்த சிங்கபூதரனும், மனைவி திருமங்கையும் அமைத்த கோவில்தான் திருமங்கலாய் சிவன் கோவில் என வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர், கங்குவேலி என்ற இடத்தில் திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணி ஒன்று காணப்படுகின்றது.

இது திருமங்கலாய் ஆலயத்தில் இருந்து பிற்காலத்தில் கங்குவேலிக்கு எடுத்துச் செல்லப்பட்ட மணியாகும்.

ஆவ்வாலய மணியில் திருமங்கலாய் கோவிலுக்கு அவ்வூரில் (திருமங்கலாயில்) வசித்த பத்திபெட்டி மகன் பத்தன்யுடைய உபயம் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

இச்சாசனத்தின் எழுத்தமைதி கொண்டு இதன் காலம் கி.பி 17 ஆம் நூற்றாண்டிற்கு உரியதெனக் கூறலாம். ஆகவே இவ்வாலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏறத்தாழ 17 ஆம் நூற்றாண்டு வரை அழிவடையாத நிலையில் இப்பிரதேச மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை தெரிய வருகின்றது.

இலங்கையில் அநுராதபுர இராசதானியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில பௌத்த ஆலயங்களே தற்காலத்திலும் வழிபாட்டிற்குரிய ஆலயங்களாக் காணப்படுகின்றன.

ஆனால் அநுராதபுரத்திலும், இலங்கையின் பல பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட பல ஆதிகால ஆலயங்கள் இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டு பிற்காலத்தில் அவை சுற்றுலாத்துறையின் முக்கிய மையங்களாகவே செயற்பட்டு வருகின்றன.

ஆனால் திருமங்கலாய் சிவன் கோவில் கி.பி 10 ஆம் நூற்றாண்டில் இருந்து 1964 ஆம் ஆண்டு வரை அங்கு வாழ்ந்த மக்களின் வழிபாட்டு கோயிலாகவே இருந்துள்ளது.





இந்த வரலாற்று பதிவினை கோயிலில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும் ஆலய மணியும் அங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் நில உரிமைப் பத்திரங்களும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

திருமங்கலாய் சிவன் கோயில் ஒரு வழிபாட்டு கோயிலாக மட்டும் பார்க்க முடியவில்லை பலதரப்பட்ட மக்களின் பார்வையில் இக் கோயில் இலங்கையிலுள்ள தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக கருதப்படலாம். ஆனால் இந்து மக்களைப் பொறுத்தவரை இக் கோயில் அவர்களின் எதிர்காலச் சந்ததியினரிடம் கையளிக்கப்பட வேண்டிய வரலாற்றுக் கடமையாகும்.

அதற்கு அப்பால் ஈழத்தில் இந்து மதத்திற்கு மிக நீண்ட வரலாறுண்டு என்பதை அடையாளப்படுத்தும் விலை மதிக்க முடியாத மரபுரிமையின் அடையாளம்.

இம்மரபுரிமைச் சின்னங்களுக்குப் பின்னால் தமிழ் மக்களின் நீண்ட வரலாறும் பண்பாடும் காணப்படுகின்றது.

ஆகவே, இக் கோயிலை மீளுருவாக்கம் செய்து பாதுகாக்க வேண்டியது தமிழ் அரசியல் வாதிகளின் கையில் இருக்கின்றது. அவர்கள் இவ் விடயத்தில் கவனம் எடுப்பார்களா என பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.?

அ. அச்சுதன்



# இணைந்திருக்கும் காலிமுகத்திடலும் பிரிந்து நிற்கும் கல்முனையும்!



அரவி வேதநாயகம்

எமது நாடு நாளுக்கு நாள் வரலாற்றில் இல்லாதவாறு பல திருப்பங்களை கண்டு வருகின்றது. அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட உலக வல்லாதிக்க நாடுகளின் கமராக் கண்களும் இலங்கை மீதே இருந்து வருகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இன, மத, மொழி பேதமற்ற போராட்ட களமாக இன்று காலிமுகத்திடல் மாற்ற மடைந்திருக்கின்றது. நாட்டின் குடிமக்கள் அவர்களது விடிவிற்காக அகிம்சை வழியில் எவ்வாறு போராடுவார்களோ அதற்கொப்பாக காலிமுகத்திடல் போராட்டம் விரிவடைந்து செல்கிறது.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி ஒன்றுபட்ட இலங்கையராய், ஒரு பலம்வாய்ந்திருந்த சிங்கள பெரும்பான்மை அரசுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுந்த வரலாறு இதுவாகத்தான் இருக்க முடியும்.

தனியான இனவாதப் பிரச்சாரங்களால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கெதிராக உசுப்பேற்றப்பட்டு ஏறத்தாள 7 மில்லியன் வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய தனது சாம்ராஜ்யத்தை தக்கவைக்க முடியாமல் திண்டாடுகிறார்.

காலிமுகத்திடல் மக்களை ஒரு குடையின் கீழ் இணைக்கையில், அரச பரம்பரையாய் ஆளவேண்டுமென்ற சிம்மாசனக் கனவுலகில் மிதந்த ராஜபக்ஷ கம்பனியினர் இன்று தமக்குள் அதிகார, பதவிப் போட்டிகளால் முட்டி மோதிக் கொண்டுள்ளனர். நொடிக்குநொடி அரசியல் அரங்கு அதிர்ந்து கொண்டிருக்கையில் ராஜபக்ஷ குடும்பம் இலங்கை அரசியலில் இருந்து துடைத்தெறியப்படவேண்டும் என்பதில் போராட்டக்காரர்கள் உறுதியாய் இருக்கின்றனர்.

2009இன் இதேபோன்றதொரு காலப் பகுதியில்தான் இதே பூமிப்பந்தின் இந்து சமுத்திரத்தின் முத்தின் வடகோடியில் நாகரிக மானுட உலகம் வெட்கித்தலை குனியும்படியாக பல ஆயிரம் உயிர்கள் பலிகொள்ளப்பட்டன. உலக போரியல் விதிமுறைகள் மீறப்பட்டு ஒரு பூர்வீக இனத்தின் மீது இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஒரு இனம் வரலாற்று வடுக்களை தன்னுள்ளே பதிவு செய்கையில் ஏனைய இரு இனங்கள் பாற்சோறு புசித்த கதை வேதனையைத் தந்தது.

ஆனாலும், இன்றைய சூழ்நிலையில் நாட்டின் வடக்கு, கிழக்கில் இன்றைய போராட்டித்திற்கு ஆதரவுக்கரம்நீட்ட தமிழர்கள் பின்னிற்கவில்லை. தனி ஒரு இனமாக தாம் கொத்துக் கொத்தாக பல்வேறு பட்ட சந்தர்ப்பங்களில் கொல்லப்பட்ட போதும் தென்னிலங்கையில் இருந்து எந்தவொரு ஆதரவுக் காரமும் நீட்டப்படாத போதும் தமிழர்கள் ஏனைய சமூகத்தாருடன் ஒன்றுபட்டு வாழவே விரும்புகின்றனர் என்பதற்கு சான்றாக அவர்கள் இன்று வழங்கிவரும் ஆதரவொன்றே போதுமானதாகும்.

உண்மையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் இன்று நாடு அனுபவிக்கும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் அனுபவித்தவர்கள். அத்தோடு இன்று அதிகளவிலான வடக்கு கிழக்கில் வாழும் குடும்பங்களின் உறுப்பினர்கள் ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளிலும் வாழ்வதனால் இன்றைய பொருளாதார நெருக்கடியும் விலையேற்றங்களும் நாட்டின் ஏனைய பாகங்களை போல் வடக்கு கிழக்கை பாதித்ததாக கூறுவதற்கில்லை.

பொருட்களுக்கு தட்டுப்பாடு என்கின்ற பிரச்சினையே அன்றி அவர்களுடைய பொருளாதாரம் ஏற்றத்திலேயே காணப்படுகின்றது. இருப்பினும் தமிழர் தரப்பு பாராளுமன்றத்திலும் சரி பல்கலைக் கழகத்திலும் சரி அரசுக்கு எதிரான எதிர்ப்பை பெரும்பான்மை சிங்கள மக்களுடன் இணைந்து வலுப்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தபோராட்டம் பெற்றோலுக்கும், காஸுக்கும் மாரடித்ததாக முற்பெறுமோ என்கிற எண்ணம் தமிழர்களின் ஆழ்மனதில் உள்ளது. விலைவாசியுடன் பொருளாத பிரச்சினைகளும் சீரடைந்தால் காலிமுகத்திடல் காலியானவுடன் சிறுபான்மை சமூகத்திற்கெதிரான அடக்குமுறைகள் தொடர்கையில் எதிர்காலத்தில் இந்த அரசுக்கெதிரான போராட்டக்காரர்களின் சிறுபான்மை மக்கள் தொடர்பான நிலைப்பாடு எவ்வாறு விட்டுக் கொடுப்போடு இருக்கப்போகிறது என்பது தான் இவர்களது போராட்டம் நாட்டின் நலனுக்கான, மக்கள் நலனுக்கான போராட்டமா என்பதை உறுதிப்படுத்தும்.

ஏனெனில், காலமுகத்திடலில் அனைத்து சமூகமும் இணைந்து ஒன்றுபட்டு அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கையில் கல்முனையில் ஒரே மொழிபேசும் இரு சமூகங்களிடையே கடந்தவாரம் இடம்பெற்ற சம்பவமொன்று நெருடலைத் தருகின்றது.

அண்மையில் கல்முனை மாநகர சபையின் ஆணையாளர் எம்.சீ. அன்சார் மீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, ஆணையாளர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தரான என். சிவலிங்கம் நியமனம் செய்யப்பட்டார். அவர் கடமையை பொறுப்பேற்க மாநகர சபைக்கு வந்தபோது அவருக்கு மாநகர சபையின் முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றக்கீப் இனால் தடையேற்படுத்தப்பட்டிருந்தது.

> **இன வாதத்தால் ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி தடுமாறுகிறார்**

அதிலும், குறிப்பாக தமிழர் ஒருவர் கல்முனையில் ஆணையாளராக செயற்பட முடியாது என தனது முஸ்லிம் மாநகரசபை உறுப்பினர்களிடம் தெரிவித்தாகவும் அறிய முடிகின்றது.

ஆணையாளர் பதவி என்பது ஒரு அரச பதவியே அன்றி அரசியல் பதவி அல்ல. அவ்வாறு இருக்கையில், குறிப்பிட்ட அரச பதவிகள் இனரீதியான நியமனங்களாக இருக்க வேண்டுமென ரக்கீப் போன்ற அரசியல்வாதிகள் ஊக்குவிப்பதானது எவ்வாறு சமூகங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்? என்ற கேள்வியை தோற்று விக்கின்றது. ஊழல் தொடர்பில் ஒரு உத்தியோகத்தர் இடை நிறுத்தப்படுவது அல்லது இடமாற்றப்படுவது தொடர்பில் ஏற்படும் வெற்றிடங்களுக்காக இன்னுமொரு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவதென்பது அரச துறையில் சாதாரண விடயமாகும். அதை தடுத்து நிறுத்துவதற்கு எவருக்கும் எந்த முகாந்திரமும் இருக்கமுடியாது.

இருப்பினும் கல்முனையை பொறுத்தவரைதொடர்ச்சியாகஆட்சிஅதிகாரங்களில் முஸ்லிம்கள் மட்டுமே இருக்க வேண்டுமென குறுகிய அரசியல் இலாபம் தேடும் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் எண்ணம் கொண்டுள்ளனர். இன ஐக்கியம், இனங்களுக்கிடையே விட்டுக்கொடுப்பு என அடிக்கடி தமிழ் - முஸ்லிம் உறவை பற்றி பேசும் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி செய்யும் கல்முனை மாநகர சபையின் மேயர் ஒருவர், தமிழ் அதிகாரி ஒருவருக்கு எதிராக நடந்துகொண்ட இந்த அநாகரிக செயலை முறைகேடானது என எந்த முஸ்லிம் தரப்புக்களும் தெரிவிக்கவில்லை. கண்டும் காணாத போக்கில் உள்ள இந்த அமைப்புகளும் தனி நபர்களும் தமிழர்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கும்போது மட்டும் இன உறவுகள் பற்றி வியாக்கியானம் செய்ய முற்படுவதேன்?

> **தமிழ் அரச அதிகாரிக்கு எதிரான கல்முனை மேயரின் அநாகரிக செயல்; கண்டிக்க யாருமில்லை**

இதேவேளை, த.தே.கூ மாநகர சபை உறுப்பினர் ராஜன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநகர சபை உறுப்பினர் செல்வா தவிர எந்த தமிழ் உறுப்பினர்களும் தமிழ் அதிகாரி ஒருவர் இங்கு நியமிக்கப்படக் கூடாது என்ற முதல்வரின் செயற்பாட்டை கண்டுகொள்ளவில்லை. தேவைக்கேற்ப தங்களது அரசியல் நாடகங்களை அரங்கேற்றும் கல்முனை மாநகர சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி மேயருக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் பகிரங்கமாகவும் திரைமறைவிலும் பல ஒத்தாசைகளை வழங்கிவருகின்ற நிலையில் முதல்வர் றக்கீப் இன் இச்செயற்பாடு த.தே.கூட்டமைப்புக்கு இன்னும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அத்தோடு கல்முனையில் தமிழர்கள் மீது முஸ்லிம் அரசியல் வாதிகளின் காழ்ப்புணர்ச்சி தெட்டத்தெளிவாக புலப்படுகையில் சில த.தே.கூவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் முஸ்லிம்களுக்காக மும்மொழிகளிலும் முளக்கமிடுகையில் தன் இனம்மீது முஸ்லிம் அரசியல் வாதிகளால் கட்டவிழ்த்துவிடப்படும் எல்லை மீறிய செயற்பாடுகளை கண்டிக்காமல் இருப்பதேன்? இவற்றை பாராளுமன்றில் சுட்டிக்காட்ட தலைப்படாததேன்?

அரசியலமைப்பின் 20 ஆம் திருத்தத்தை ஆதரித்த அதே பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள பிரதேசம் கல்முனை. முஸ்லிம் காங்கிரஸ் சில உறுப்பினர்கள் உட்பட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 ம் திருத்தத்தை ஆதரித்தது மட்டுமன்றி மக்கள் வேண்டாமென்கின்ற தற்போதைய அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவிகளையும் ஏற்றுள்ள நிலையில் இவை ஒன்றுக்குமே ஒவ்வாத நிலைகொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டும் முஸ்லிம் காங்கிரசுடன் ஒட்டி உறவாடும் மர்மம்தான் என்ன?

இவ்வாறானா பல்வேறுபட்ட கேள்விகளுக்கு நடுவே, "பிட்டும் தேங்காய் பூவும் போல" என உவமையிட்டு கூறப்படும் ஒரே மொழிபேசும் தமிழ் - முஸ்லிம் உறவுக்கு நடுவே முஸ்லிம்கள் தமிழர்களை அரசியல் அதிகாரங்களையும், அரச அதிகாரங்களையும் பயன்படுத்தி அடக்கி ஒடுக்க முனைகையில் காலிமுகத்திடலிலும் பெரும்பான்மையினருடன் சேர்ந்து போராடிய பின் தமிழர்களுக்கு பருப்புக்கும் பாணுக்குமான போராட்டமாகிவிடக்கூடாது என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

# 1991 இந்தியாவிலும் மோசமான நெருக்கடி

நம்மைப் போல, ஒரு பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு இந்தியா 1991 இல் முகங்கொடுத்தது.

ஆனால், இந்தியா செய்த பாக்கியம் அன்று மன்மோகன்சிங் என்ற பொருளாதார வல்லுனர் நிதியமைச்சராக இருந்தது. ஒரு மோசமான ***check*** நிலைமையை தனது உறுதியான தீர்மானங்களாலும் திறமையான செயற்பாடுகளாலும் சிதறடித்து சரிந்த இந்தியாவை நிமிர்ந்து நிற்க வைத்தார் அவர்.

வெளிநாட்டுக் கடன் தவணையை செலுத்த முடியாமல் போனபோது இந்தியா நம்மைப் போல் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி நிற்கவில்லை. தனது கையிருப்பிலுள்ள தங்கத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்து இந்தக் கடனை அடைத்தது. இதன் மூலம் ***default*** பண்ணுவதைத் தவிர்த்தது.

டொலருக்கு எதிராக இந்திய ரூபாயின் பெறுமதி இறக்கம், சிங் கையாண்ட முக்கியமான மூலோபாயமாகும். இதனால், வெளிநாடுகளில் இந்திய உற்பத்திப் பொருட்களின் விலைகள் சடுதியாக குறைந்து விற்பனை அதிகரித்தது.

அதிகரித்த ஏற்றுமதி வருமானத்தால் டொலர் கையிருப்பு அதிகரிக்கத் தொடங்கியது. இன்று 634 பில்லியன் டொலரை கையிருப்பாக வைத்திருக்கிறது இந்தியா.

எமக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடி நிலைமையில் இருந்து மீள இந்த நிலைமையையே சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பதை இந்திய அனுபவம் எமக்கு கற்றுத் தருகிறது.

ஆம். எமது நாணயப் பெறுமதி வீழ்ச்சி அடைந்திருப்பதால் ஏற்றுமதி பொருட்களின் விலைகள் உலக சந்தையில் குறைவடையும். இதனால் கேள்வி அதிகரித்து எமது உற்பத்தி அதிகரிக்கும்.

அத்துடன், இங்கே ஹோட்டல்களில் தங்குவதற்கும் ஏனைய செலவுகளுக்கும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் டொலரில் செலுத்த வேண்டிய தொகை முன்னரைவிட குறைவாகவே இருக்கும். இதனால் அதிகளவில் உல்லாசப் பிரயாணிகள் இங்கு வருவார்கள். எமது அந்நிய செலாவணி உழைப்பு இதன் மூலம் அதிகரிக்கும்.

**மன்மோகன் சிங்கின் உறுதியான தீர்மானங்களால் இந்தியா மீண்டது**

கேட்க இதெல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஆனால், ஒரு சிக்கல்.

ஆழமாக ஒரு முறை மூச்சை உள்ளிழுத்து வெளியே விடுங்கள். வெளிவிடும் மூச்சு ரெண்டு செக்கன்கள் அதிகமாக இருப்பது சிறப்பு.

மின் வெட்டால் உற்பத்தித் துறை பாதிக்கப்படுவதால் உற்பத்திகளை அதிகரிக்க முடியாது. வெளிநாட்டவர் வருகையும் இதனால் கூடப் போவதில்லை. மறுபுறம் உற்பத்திகளையும் விநியோக முறைகளையும் சிறப்பாக மேற்கொள்ள முடியாமல் எரிபொருள் தட்டுப்பாடு இருக்கிறது. இந்த எரிபொருள் தட்டுப்பாட்டால் போக்குவரத்தில் ஏற்படும் குறைபாடும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இங்கு வருவதை ஊக்குவிக்கப் போவதில்லை.

இங்கிட்டும் திரும்ப முடியாத அங்கிட்டும் போக முடியாத ஒரு முட்டுச் சந்தில் நாட்டைக் கொண்டுவந்து நிறுத்தி... றொம்ப

**முட்டு சந்தியில் நாட்டை நிறுத்தியிருக்கும் கோட்டா**

நல்லாத்தான் பண்ணியிருக்க கோத்தா.

இப்படியொரு ***checkmate*** நிலைமையில் இருந்து இலங்கையை மீட்க இங்கு மன்மோகன் சிங்குகள் இல்லை என்பதே யதார்த்தம்.

சட்டத்தரணி
நசீம் ஹிக்மத்

## மட்டக்களப்பில் ஊடகவியலாளர் சிவராமின் 17ஆவது நினைவேந்தல்



படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமின் 17 வது நினைவு தினத்தினை முன்னிட்டு வெள்ளிக்கிழமை (29) மட்டக்களப்பில் நினைவேந்தல் நிகழ்வும் கவன ஈர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத் தூபியில் வைத்து மறைந்த ஊடகவியலாளர் டி.சிவராமின் உருவப் படத்திற்கு தீபம் ஏற்றி, மரல்தூவி, அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்ட கவன ஈர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஷ்ணகுமார், கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல்.தேவஅதிரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கோ. கருணாகரம்(ஜனா), இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவான், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இ.விரசன்னா, இரா. துரைரெத்தினம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் த.சுரேஸ், ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.









## யாழ் ஊடக மையத்தில் சிவராமின் நினைவேந்தல்


படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தராகி சிவராம் மற்றும் ரஜிவர்மன் ஆகியோரின் நினைவு தினம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.ஊடக அமையத்தில் அனுஸ்டிக்கப்பட்டது.

யாழ் ஊடக அமையத்தில் அன்று மதியம் 12 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு தராகி சிவராம் மற்றும் ரஜிவர்மன் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து , மலர் தூபி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.


இளம் ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

இலங்கையில் நிலவும் ஊடக – கருத்துச் சுதந்திர மறுப்பு சூழலைக் காட்டும் சிவராம் மற்றும் ரஜீவர்மன் உள்ளிட்டவர்களின் படுகொலை நடந்து பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும், ஊடகவியலாளர்களின் கொலைகளுக்குப் பொறுப்பான குற்றவாளிகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.







# சித்திரைப் பெருமகனார் செல்லையா இராஜதுரை

## மட்டக்களப்பு மண்ணின் முடிசூடா மன்னர்



கடந்த 17.04.2022 அன்று, திருமதி. கௌசி சிவபாலன் அவர்கள் ஜெர்மனியிலிருந்து நடாத்தும் தமிழ் வான் அவை ஊடாக "சித்திரைப்பெருமகனார்" என்ற தலைப்பில் ஒரு விசேட கௌரவிப்பு நிகழ்வு இணையவழியூடாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சித்திரைப் பெருமகனாராக சிறப்பு கௌரவம் பெற்றவர் மட்டக்களப்பு மண்ணின் "முடிசூடா மன்னர்" என்றும் "சொல்லின் செல்வர்" என்றும் மக்களால் போற்றப்படுகின்ற மட்டக்களப்பு மண்ணின் மைந்தர், முன்னாள் அமைச்சர், இலங்கைக்கான மலேசியா நாட்டின் தூதுவராக இருந்தவர் கலாநிதி செல்லையா இராஜதுரை அவர்கள்.

திரு. செல்லையா. இராஜதுரை அவர்கள் 27.07.1927 ஆண்டு பிறந்தார்.

இவர் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்விகற்று, பின்னர் எழுத்தாளராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் இருந்து பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சியில் இணைந்து 1956 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகினார்.

தொடர்ந்து நடந்த அனைத்து தேர்தல்களிலும் வெற்றிவாகை சூடி 1989 வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் இவர் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரசுடன் இணைந்து அமைச்சராகவும் இருந்துள்ளார். இறுதியாக அரசின் தூதுவராக மலேசியாவில் பணிபுரிந்து பின்னர் ஓய்வு பெற்றார்.

சரி, இனி தமிழ் வான் அவை, அகவை 95ஐ அடைந்த இவரை கௌரவம் செய்ய வேண்டும் என்ற விருப்போடும், கடமையுணர்வோடும் இந்த 'சித்திரப் பெருமகனார்' என்ற நிகழ்வை பெருமிதத்துடன் நடத்தியது.

இந்த நிகழ்வில் அவரின் அரசியல் சார்ந்த பக்கங்களைத் தவிர்த்து, அவரது இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் பக்கங்களைப் பற்றியும், அவர் தனது மண்ணுக்கும், மக்களுக்கும் ஆற்றிய பணிகள், சேவைகள் பற்றியும் அலசி ஆராய இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது.

உண்மையில், கௌசி சிவபாலன் அவர்கள் மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த நிகழ்வின் நாயகனையும், அவர் குடும்ப உறுப்பினர்களையும், மற்றும் பேச்சாளர்களையும் ஒழுங்கு செய்து இந்த நிகழ்வை மிக சிறப்பாக செய்து முடித்தார்.

### அவருக்கு பாராட்டுக்கள்

நிகழ்வின் ஆரம்பத்தில் அனைவரையும் வரவேற்றுக்கொண்டு முதலில் வரவேற்புரை வழங்க இந்தியாவிலிருந்து கலந்துகொண்ட நல்லாசிரியர் வே. பூங்குழலி பெருமாள் அவர்களை அழைத்தார். அவர் மிக சிறப்பாக எல்லோரையும் வரவேற்று பேசினார். அதைத் தொடர்ந்து பேராசிரியர் சி. மௌன குரு அவர்களை, அறிமுக உரையாற்ற அழைத்தார்.

பேராசிரியர் அவர்கள், தனக்கும், திரு. இராஜதுரை அவர்களுக்கும் இடையே உள்ள உறவையும், தனது சின்ன வயதில் இராஜதுரை அண்ணாவின் தமிழ் பேச்சில், அவரது இலக்கிய ஈடுபாட்டில் பெரிதும் கவரப்பட்டு அவரை நேசிக்கத் தொடங்கினார் என்றும், தனக்கு ஒரு அரச பதவி பெற்றுத்தர தனது தகப்பனார் அண்ணரிடம் கோரினார் என்றும் ஆனால், அண்ணா அதற்கு மறுத்து, இவன் சின்ன உத்தியோகம் பார்க்க வேண்டியவன் அல்ல உயரத்திற்கு செல்வான் என்று தீர்க்க தரிசனமாக சொன்னதால்த்தான், தான் இன்று இருக்கும் பெரிய இடத்திற்கு வரமுடிந்தது என்று நெகிழ்ச்சியுடன் சொன்னதுடன் அண்ணன் அவர்கள் உருவாக்கிய இசை நடனக்கலை கற்கை கல்லூரியில் இன்று பணிப்பாளராகவும் இருக்க முடிந்தது என்றும் சொன்னார்.

அதை தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றன. முதலில் இலங்கையிலிருந்து திரு. தம்பிராஜா ஈஸ்வரராஜா அவர்கள் பேசினார்.

இவர் தனது பேச்சில் மட்டக்களப்பு மண்ணுக்கு கிடைத்த பொக்கிஷம் திரு. இராஜதுரை ஐயா அவர்கள். என்று சொல்லி அவர் மட்டக்களப்பின் முதலாவது மேயராக இருந்து அதன் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினராக 33 வருடங்கள் தொடர்ந்து இருந்து மக்களுக்கும் மண்ணுக்கும் தன்னால் முடிந்த பணிகளை செய்தவர் என்று, நிகழ்வின் நாயகனுக்கு புகழாரம் சூட்டினார்.

அதைதொடர்ந்து இலங்கையிலிருந்து தவராஜா இராஜேந்திரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.



இவர், இராஜதுரை ஐயா பற்றி பலரும் அறியாத பல விடயங்களை தனது உரையில் தெளிவாக சொன்னார். தனக்கும், இராஜதுரை அவர்களுக்கும் இடையில் இருந்த சிறு பிரச்சினையை, அவர் எப்படி கையாண்டார் என்பதை சொன்னார்.

சொல்லின் செல்வர் என்று போற்றப்படும் இவரை, தான் பொய்யின் செல்வர் என்று தனது பத்திரிகையில் எழுதியதாகவும், பின்னர்தான் வெளிநாடு சென்று திரும்பியபோது, தன்னை தனது வீட்டுக்கு அழைத்து, ஒரு கோப்பைக் கொடுத்து படிக்கச் சொன்னதாகவும் அதனுள்ளேதான் முன்பு எழுதிய விடயங்கள் இருந்ததாகவும், தொடர்ந்து படிக்கும்போது தான் குற்றம் சாட்டிய அனைத்து விடயங்களும் ஆதாரத்துடன் செய்து முடிக்கப்பட்டு இருந்ததாகவும் சொல்லி, தன்னைப்பற்றி தப்பு தப்பாக எழுதிய ஒருவரை தண்டிக்காமல், அனைத்தையும் செய்து முடித்து விட்டு தன்னைக் கூப்பிட்டு அவர் அன்பு பாராட்டிய விதத்தை விதந்து பேசினார்.

மேலும் முன்னாள் அமைச்சரின் வம்சம், குடும்பம் பற்றிய விளக்கம் மிக தெளிவாக இவரால் சொல்லப்பட்டது.

அடுத்து சிறப்பு பேச்சாளராக பிரான்சிலிருந்து திரு. எம் ஆர். ஸ்டாலின் அவர்கள் திரு. இராஜதுரை அவர்களின் அரசியல் பற்றி ஆழமாக பேசாமல் தனது பேச்சின் நடுவில் ஆங்காங்கே தொட்டு சென்றார்.

இவருடைய பேச்சும், நிகழ்வின் நாயகனுக்கு மகுடம் சூட்டியது என்றே சொல்ல வேண்டும். நீண்ட நேர இந்த நிகழ்வு வெறுமனே பேச்சுகள் மட்டும் இருந்தால் சுவாரசியம் அற்றுப் போய்விடும் என்று நினைத்து இடைக்கிடையே நடனங்களையும் கவிதைகளையும் பாடல்களையும் புகுத்திய தமிழ் வான் அவை கௌசி அவர்களின் சாதுரியத்தை பாராட்டியே ஆகவேண்டும்.

அனைத்து கலை நிகழ்வுகளும் ரசிக்கும்படி மிக அழகாக, நேர்த்தியாக இருந்தன.

தொடர்ந்து நிகழ்வில் பல நாடுகளிலும் இருந்து கலந்து கொண்ட கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் விழாவின் நாயகன் திரு. இராஜதுரை அவர்கள் பற்றி தங்களுக்கு தெரிந்த தகவல்களையும் அவருடன் தங்களுக்கு இருந்த உறவு பற்றியும் பகிர்ந்து கொண்டார்கள்.

குறிப்பாக, அவுஸ்திரேலியாவிலிருந்து திரு. பாடும் மீன் ஸ்ரீகந்தராஜா, கனடாவிலிருந்து திரு. பாபு ஜெயகாந்தன், திரு. சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் அவர்கள், ஜெர்மனியிலிருந்து திரு. புத்திசிகாமணி இலண்டனிலிருந்து திருமதி, இராஜேஷ்வரி பாலசுப்ரமணியம், திரு. பால சுகுமார், திரு. கோவிலூர் செல்வராஜன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இறுதியில் நிகழ்வின் நாயகன் கலாநிதி செல்லையா இராஜதுரை அவர்கள் தனது மகள் திருமதி பூங்கோதையுடன் இணைந்து நடந்த நிகழ்வுகள் தனக்கு நிறைவாக இருந்தனவென்றும், மகிழ்ச்சியை தந்தன வென்றும் சொன்னார். பலர் கேட்ட கேள்விகளுக்கும் அவர் மென்மையாக பதில் அளித்தார்.

பின்னர் நடந்த கலந்துரையாடலின்போது மண்ணின் மைந்தன் இராஜதுரை அவர்களுக்கு அவர் வாழும் போதே அவர் வாழ்ந்த மண்ணில், அவர் உருவாக்கிய இசை நடனக் கல்லூரி வளாகத்தில் அவரது உருவச் சிலை வைக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

இதை எல்லோரும் சேர்ந்தே செய்ய வேண்டும் என்றும் இதுபற்றி பின்னர் தெளிவான முடிவு எடுக்கப்படும் என்றும் பேசப்பட்டது.


நான்கு மணி நேரம் நீடித்த இந்த சிறப்பு கௌரவிப்பு நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.



கோவிலூர் செல்வராஜன்



# முற்றாக முடங்கும் மட்டு. மட்பாண்ட தொழிலாளர்கள்



வ. சக்திவேல்

**“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”** எனும் வாக்கிற்கு அமைய நோயில்லாமல் வாழ்வதே பெரும் செல்வமாகக் கருதப்படுகின்றது. அந்த வகையில், மனித வர்க்கத்திற்கு நன்மை மட்டும் தரக் கூடிய மட்பாண்டப் பொருட்களின் பாவனை சிறந்த இடத்தை வகிக்கின்றது.

எதுவித நோய்களையும், மனிதர்களுக்குத் தராது. ஆரோக்கியத்தை மாத்திரமே மட்பாண்ட பாவனைகள் மனிதர்களுக்குக் கொடுக்கின்றது. மட்பாண்டம் என்பது மண்ணால் செய்யப்படும் பாத்திரங்களைக் குறிக்கின்றதாகும்.



முற்காலத்திலேயே மட்பாண்டங்கள் செய்யும் முறைகள் கண்டறியப் பட்டு விட்டன. மட்பாண்டத் தொழில் மிகவும் பழமை வாய்ந்த ஒரு தொழிலாகும். இந்த தொழிலைச் செய்பவர்கள் குயவர்கள் என அழைக்கப்படுவதும் உண்டு. கிராமப் புறங்களில் இந்த தொழில்களைச் செய்பவர்கள் காணப்பட்டாலும், குறைந்தளவானோரே இதனைத் தமது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றார்கள்.

தற்போதைய நவீன உலகின் நாகரீகங்களின் வளர்ச்சி, தொழில் நுட்பத்தின் வளர்ச்சி, விஞ்ஞானத்தின் வளர்ச்சி போன்ற பல காரணங்களினால், உலகில் அலுமினியம், இறப்பர், சில்வர், போன்ற பல வகையான உலோகப் பாத்திரங்களை தத்தமது தேவைகளுக்காக மக்கள் பயன்படுத்தத் தொடங்கியதனால், மட்பாண்ட உற்பத்திகளும் அதன் பயன்பாடுகளும் தற்போது குறைவடையத் தொடங்கியுள்ளன.

எனினும், ஆங்காங்கே குப்பையில் கிடக்கும் குன்றுமணி போன்று சிலர் அத்தொழிலை கைக் கொண்டு வருகின்றதனையும் அவதானிக்க முடிகின்றது.

பண்டைய காலங்களில் மண் பாத்திரங்களில் தண்ணீர் ஊற்றி வைப்பதுவும், மண் பாத்திரங்களில் சமைப்பதுவும், வழக்கமாகக் காணப்பட்டு வந்தன. காலப் போக்கில் அவை மாற்றமடையத் தொடங்கின. எனினும், தற்காலத்தில் வருடந்தோறும், இந்துக்கள் பொங்கல் பண்டிகையின்போது, பெரும்பாலானவர்கள் மண்பானையில் பொங்கி வழிபாடு செய்வதை அவதானிக்க முடிகின்றது.



அது மாத்திரமின்றி மண் பாத்திரம், சிறந்த நீர் சுத்திகரிப்பு பாத்திரமாகும். மண் பானையில் வைக்கும் தயிர் உடல் ஆரோக்கியத்தையும் கொடுக்கின்றது. இவை தமிழர்களின் அனுபவப் பகிர்வுகளாக சுட்டிக் காட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

இவ்வாறாக மட்பாண்ட உற்பத்திகளை மேற்கொள்பவர்கள், கொவிட் - 19 எனப் படும் கொரோனா நோய்த் தாக்கத்தினால் அவர்களது வாழ்வாதாரமும் முற்றாக முடங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி, பெரியபோரதீவு, முனைத்தீவு, பட்டபுரம், ஏறாவூர் உள்ளிட்ட பல இடங்களிலும் மட்பாண்டத் தொழிலில் ஈடுபடுபவர்கள் உள்ளார்கள். இவ்வுற்பத்தியாளர்களின், சட்டி, பானை, உள்ளிட்ட பலவிதமான மட்பாண்ட உற்பத்திகள், தற்போது உடைந்துபோயும், விற்பனைகளின்றியும்,

## களுவாஞ்சிகுடி, பெரியபோரதீவு, முனைத்தீவு, பட்டபுரம், ஏறாவூர் பகுதிகளில் மட்பாண்டத் தொழிலாளர் வாழ்வாதாரம் இழந்து தவிப்பு

கிடப்பதாக அத்தொழிலில் ஈடுபடுபவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசத்தின், பெரிய போரதீவு பகுதியிலுள்ள மட்பாண்ட தொழிலாளர்கள், அதற்குரிய மூலப் பொருளைப் (களி) எடுத்து, மிகுந்த சிரமத்தின் மத்தியில் அதனை பதப்படுத்தி மட்பாண்ட உற்பத்திகளைச் செய்து தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வந்தாலும், அதிலிருந்து கிடைக்கும் வருமானம் தமது வாழ்வில் தாக்குப்பிடிக்க முடியாமல் இருந்து வரும் வேளையிலும், தமக்குத் தெரிந்த ஒரே ஒரு தொழிலான அந்த மட்பாண்டத் தொழிலைக் கைவிடாது செய்து வரும் இந்நிலையில், தற்போது தாம் மேற்கொள்ளும் தொழில் அடியோடு வீழ்ந்துள்ளதாகவும், இதனால் தமது குடும்பம் மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களது மனக் கிலேசத்தைத் தெரிவிக்கின்றனர்.

பெரியபோரதீவு, பட்டாபுரம், முனைத்தீவு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 200 இற்கு மேற்பட்டவர்களின் வாழ்வாதாரம் முடங்கியுள்ளதால் அவர்களின் மத்தியில் தற்போது பெரும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.



ஆலய நிருவாகத்தினரும், எனைய பொது அமைப்புக்கள், மற்றும் தனி நபர்களும், அவ்வப்போது அவர்களால் இயன்ற உலர் உணவுப் பொதிகளை வழங்கி விட்டுச் சென்றாலும், அது அம்மக்களின் நிரந்தர உணவுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமையாது.





கொரோனா தாக்கம் பீடிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திய வேளைகளில் மக்களுக்கு அன்னமிட்டவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். ஆனாலும் நாளாந்தம் உற்பத்தி செய்யும் மட்பாண்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கும், அல்லது விற்பனைக்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளவும், மக்கள் பிரதி நிதிகளும். அரச அதிகாரிகளும், நிரந்தர வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவர்களின் தலையாய கடமையாகும்.

வழக்கமாக இந்து ஆலயங்களின் விழாக்கள் மற்றும் உற்சவ காலங்களில் இவ்வாறு மட்பாண்ட உற்பத்திகளைச் செய்பவர்கள் தமது உற்பத்திகளை வாகனங்களில் ஏற்றிக் கொண்டுபோய் காலத்திற்குக் காலம், விற்பனை செய்து வருவது வழக்கம், ஆனால் தற்போதைய நிலையில் இந்து ஆலயங்களின் விசேட உற்சவங்கள், விழாக்கள் அனைத்தும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் அவ்வாறு காலத்திற்குக் காலம் ஏற்படுத்தப்பட்டுவரும் வியாபாரங்களும். இல்லாமல் போய்யுள்ளனர். பொதுச்சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்த மட்பாண்ட உற்பத்திகளும், தற்போதைய நிலையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மட்பாண்டம் தவிர்ந்த ஏனைய உலோகப் பாத்திரங்களில் மக்கள் சமைத்து உண்பதனால் பலவித நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக சுகாதார அவதானிகள் தெரிவிக்கின்றனர். எனினும், மக்கள் பழமையை மறந்து புதுமையான உலோகப் பாத்திரங்களை பாவிப்பதனால் பல தொற்றா நோய்களுக்கும் உட்படுகின்றார்கள். இவ்வாறான ஆரோக்கிமான சமூக விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் மக்கள் மத்தியில் விதைக்க வேண்டியுள்ளது.

## பாதிக்கப்பட்டு இருப்போருக்கு மானியங்களும் இல்லை; உதவியும் இல்லை



எனவே, கொரோனா பீதி ஒரு புறமும், உற்பத்தி செய்யும் மட்பாண்டப் பொருட்கள் தேங்கிக் கிடந்து அழிந்து போகும் மறுபுறமும், பார்ப்பதையிட்டு மட்பாண்ட உற்பத்தியாளர்கள், தமது மனக்கிலேசத்தைத் தெரிவிக்கின்றனர்.

எது எவ்வாறு அமைந்தாலும், ஏனைய தொழில்கள் அழிவிற்கு நட்ட ஈடு கொடுப்பது போன்று தமது தொழிலுக்கும் நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுக்கவும், தமது உற்பத்திகளை சிறந்த முறையில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும், ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளவும் சம்மந்தப்பட்டவர்கள் முன்னின்று செயற்பட வேண்டும், என மட்பாண்ட உற்பத்தியாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எது எவ்வாறு அமைந்தாலும் மட்பாண்ட உற்பத்தி போன்ற சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் வாழ்தாரங்களும் நீடித்து நிலைத்திருக்கத் தக்க வகையில் அபிவிருத்தித் திட்டங்களும், முன்னோக்கிக் கொண்டு செல்லப்படல் வேண்டும். தொழில் முயற்சிகள் பாதிக்கப்படுமிடத்து அவற்றை மீழவும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகளையும் உந்து சக்திகளையும் வழங்க வேண்டும்.

தற்காலத்தில் வாராந்தம், மாதாந்தம் என வட்டிக்கு பணம் கொடுத்து விட்டு மக்களை மேலும் கடன் சுமைக்குள் தள்ளிவிடும் நிதி நிறுவனங்கள், மட்பாண்டத் தொழில் போன்ற சுயதொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்ற சிறுகடன் வசதி வாய்ப்புக்களையும், ஆலோசனைகளையும், ஏற்படுத்தி அவ்வாறானவர்களையும் தொழில் ரீதியில் மேலோங்கச் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்பதையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

சிறுகதை

# முற்றத்து மல்லிகை

கோவிலூர் செல்வராஜன்

மத்திய லண்டனிலிருந்து தெற்கு லண்டனுக்கு தனது காரில் சென்று கொண்டிருந்தான் சத்தியன் .

கிழமை நாட்களில் வேலைவிட்டு வீடு திரும்புகின்ற நேரம். எல்லா வீதிகளும் ட்ராபிக் ஜாமாக இருக்கும்.

இனி சிக்னல் நிறுத்தம். இப்படி பல சிக்கல்களுக்கு மத்தியில்தான் அவன் காரை செலுத்தவேண்டும்.

சில சமயங்களில் அவனால் அந்த நெருக்கடியை தாங்க முடியாமல் எங்கே யாவது ஒரு சந்தில் காரை திருப்பி விட்டு அவனையே நொந்துகொள்ளுவான். ஏன்தான் இந்த காரில் வந்தோம் என்றும் பேசாமல் ட்ரெயினில் வந்திருக்கலாம் என்றும் அலுத்துக்கொண்டு பாதை கொஞ்சம் சரிவந்த பின் மீண்டும் பயணத்தை தொடர்ந்த சமயங்கள் நிறைய உள்ளன.

இன்று அவன் நேரத்திற்கு வீட்டுக்கு போக வேண்டி இருந்ததால் சோர்ட் லீவில் மூன்று மணிக்கே வீட்டுக்கு புறப்பட்டு விட்டான். வீடுக்கு போன பிற்பாடு அங்கிருந்து மீண்டும் அவன் ஒரு முக்கிய நபரை சந்திக்க வெளியில் செல்ல வேண்டி இருந்தது.

ஆம் அவன் தாயகத்திலிருந்து இன்று வருகின்ற இசைக் கலைஞர் கிருஷ்ணன் அவர்களை வரவேற்க வானூர்தி நிலையத்திற்கு செல்லவேண்டும். அதனால்தான் நேரத்திற்கே புறப்பட்டு விட்டான்.

கிருஷ்ணன், ஆரம்பத்தில் ஒரு இசைக் குழுவை ஆரம்பித்து வடகிழக்கு கோவில் உற்சவகாலங்களில் தனது இசைநிகழ்ச்சியை ஒப்பந்தம் செய்யும் ஊர்களுக்கு தன் கோஷ்டியுடன் சென்று இசை நிகழ்ச்சி செய்து, மக்கள் மத்தியில் பெரும் புகழ் பெற்ற இசைக்கலைஞர். இவரை அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நன்றாக தெரியும். நாற்பது, ஐம்பது வயதுக்காரருக்கு ஓரளவு தெரியும்.

இவர் எழுபதுகளில் ஈழத்து பொப்பிசை பாடல்களுக்கு இசை அமைத்தவர். மெல்லிசை பாடல்களுக்கு இசை வழங்கியவர் ஈழத்து தமிழ் திரைப்படங்களுக்கு இசை வழங்கியவர். பல பாடகர்களை உருவாக்கி விட்டவர். நாட்டுப்புற பாடல்கள் பலவற்றை எடுத்து அற்புதமான இசை வழங்கி அவற்றை ஜனரஞ்சகமாக்கியவர் கிருஷ்ணன் அவர்கள். அவரை லண்டனுக்கு கூப்பிட்டு மதிப்பளிக்க வேண்டும் என்று எண்ணிய பலருள் சத்தியனும் ஒருவன்.

பல வருடங்களுக்கு முன் இவரை கூப்பிட்டு லண்டனில் மதிப்பளிக்க வேண்டும் என்று முயற்சித்த போதும் அது பல காரணங்களால் தடைப்பட்டுப் போனது. இம்முறை வேறு ஒருவர் முயற்சித்து அது வெற்றி பெற்று இருக்கின்றது. அந்தவகையில் சத்தியனுக்கும் அது மகிழ்ச்சியைக் கொடுத்தது.

தாய் நாட்டில் இருந்த காலத்தில் சத்தியன் ஒரு பாடகனாக இருந்தான். பல பாடல்களை கிருஷ்ணன் இசையில் பாடி இருக்கின்றான். அவரோடு இசை நிகழ்சிகள் பலவற்றுக்கும் சென்று தனது பங்களிப்பை செய்திருக்கின்றான்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையால் அவன் புலம்பெயர்ந்து வர வேண்டியதாகப் போய்விட்டது. அவன் மட்டுமல்ல கிருஷ்ணன் அவர்களோடு மிக நெருக்கமாக இருந்த பலர் புலம்பெயர்ந்து பல நாடுகளிலும் வாழ்கின்றார்கள்.

தாயகத்தில் ஏற்பட்ட அந்த அசாதாரண நிலை, அன்று அரச பயங்கரவாத சட்டம் எல்லாம் சத்தியன் போன்றோரை புலம்பெயர வைத்தன. இப்போது போர் முடிந்து நாட்டில் அமைதி நிலவினாலும் இன்னும் மக்களின் மத்தியில் பல பிரச்சினைகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன என்பது ஓரளவிற்கு எல்லோருக்கும் தெரிந்த விடயமே.

சத்தியன் தென்கிழக்கு லண்டனில் உள்ள அவனின் வீட்டுக்கு வந்துவிட்டான். அவசர அவசரமாக குளித்து உடைமாற்றிக்கொண்டு வீடிலிருந்து புறப்பட்டு வந்து, பின் ஹைவே எடுத்து வானூர்தி நிலையம் விரைந்தான். அங்கு காரை பார்க் செய்துவிட்டு டேமினால் மூன்று அரைவலுக்கு சென்றான்.

அங்கு முன்னரே கிருஷ்ணன் அவர்களை லண்டனுக்கு அழைத்திருந்த பிரகாஷ், மற்றும் ஊடக நண்பர்கள் எல்லோரும் நின்று இருந்தார்கள். சத்தியனை எல்லோருக்கும் தெரியும் என்பதால் ஒருவருக்கொருவர் முகமன் கூறிக்கொண்டார்கள்.

ஒரு பத்து நிமிடங்களின் பின்னர் லண்டன் ஹீத்ரோ வானூர்தி நிலையத்தின் டேமினால் மூன்றின் பிரயாணிகள் வருகை கதவு திறந்தது. இசையமைப்பாளர் கிருஷ்ணன் தன் பெட்டிகளை தள்ளு வண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு வந்துகொண்டு இருந்தார்.

காத்து நின்ற அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி. அவருக்கு பூக்கொத்து கொடுத்து வரவேற்றுக் கொண்டனர். லண்டன் மாநகரம் எங்கள் தாயக இசை வாருதியை வரவேற்கின்றது என்ற வாழ்த்தும் சொல்லிக் கொண்டார்கள். சத்தியன் அவரை ஆரத் தழுவிக்கொண்டான். சத்தியனை சந்தித்ததில் அவருக்கும் பெரும் மகிழ்ச்சி.

எல்லோரும் வந்து ஒரு கபே ஸ்டாலில் அமர்ந்து கொண்டார்கள். பேசுக்கள் தொடங்கின.

“எப்படி அண்ணை பிரயாணம் எல்லாம் நல்லா இருந்ததே” சத்தியன் கேட்டான்.

“ஓ நல்லபடியாக இருந்தது. அப்படி இருக்காட்டாலும் வந்துதானே ஆகவேண்டும் இல்லியே. ப்ளைட்டில் இருந்து குதிக்கவா முடியும்?”

“அண்ணை இனி தொடங்கிடுவார். நக்கலுக்கும் பகிடிகளுக்கும் பஞ்சம் இனி இல்லை. நானும் இரண்டு கிழமை லீவு போட்டுவிட்டு என் மனச்சுமைகளை குறைக்க அண்ணையுடன்தான் இருக்க போறன்” என்று சத்தியன் சொன்னான்.

சத்தியனும் தனிமையில் இருப்பதால் அவனுக்கும் ஒரு பொழுது போன மாதிரி இருக்கும். இனி இசைவாருதியை மிக புரிந்து வைத்திருப்பவன். கடந்த வருடமும் தாயகம் சென்றபோது இவரை சந்தித்து, பாடல்கள் மூன்று செய்து கொண்டு வந்தவன். மற்றவர்களை விட சத்தியன், கிருஷ்ணன் அவர்களை பார்த்துக் கொள்வதற்கு மிக பொருத்தமான ஆள்.

அதே நேரம் கிருஷ்ணனுக்கும் மற்றவர்களை விட சத்தியனை நன்கு தெரியும் ஒன்று. மற்றது அவரின் பகிடிகளை எல்லோரும் சகித்துக் கொள்வார்கள் என்று எப்படி சொல்வது. ஆக அவருக்கும் சத்தியனுடன் இருப்பது பிடித்தமானதே.

“சத்தியன் அண்ணே, ஐயாவை நீங்கள் வீட்டில் வைத்திருக்க முடியுமா அண்ணே?” திடீர் என்று கேட்டான்அவரை ஸ்பொன்சர் செய்த பிரகாஷ்.

“தம்பி.. வித் ப்ளசர். அவரை என்னுடன் வைத்திருப்பது எனக்கு மகிழ்ச்சி. ஒன்றும் பிரச்சினை இல்லை.”

“தாங்க்ஸ் அண்ணன் நான் ஐயாவை எங்கு தங்க வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டே இருந்தேன்.”

“நானும் இதை பற்றி யோசிக்கல்ல தம்பி. அவரை வைத்திருப்பது எனக்கு கிடைத்த பாக்கியம். நான் கூட்டிக்கொண்டு போகின்றேன். இனி உங்களுக்கு கவலை வேண்டாம்”

“பார்த்தீரா பிரகாஷ் இசையும், பாட்டும் சேர்ந்து கொள்ளும். நாம ரசிகர்கள்தானே தள்ளி இருந்து ரசிப்போம்” என்று சொன்னார் ஊடக நண்பர் நாதன்.

சுவாரஸ்சயமாக பேசுக்கள் சென்று, காப்பியும் குடித்து முடித்தபின்னர் புறப்பட்டார்கள்.

சத்தியன், கிருஷ்ணன் அவர்களை அழைத்துக்கொண்டு தனது கார் பார்க் பண்ணிய இடத்திற்கு வந்தான்.

“அண்ணே லண்டன் குளிர் ஒரு வித்தியாசமான குளிர். ஸ்னோ இருக்காது. ஆனால் ஸ்னோ இருக்கும் நாடுகளைவிட பயங்கர குளிராக இருக்கும். நல்லா மப்பளரை கழுத்துக்குள் கட்டிக்கொள்ளுங்கள். இந்தாங்க இந்த தொப்பியை போட்டு காது வரைக்கும் இழுத்து விடுங்கள். குளிர் காதுக்குள்ளாலதான் போகும் கண்டியளே”

“எனக்கு தொப்பியை தந்துபோட்டு நீர் என்ன கையாலையே காதுகளை பொத்தப் போறீர்?”

“அண்ணே வேணாம் அண்ணே... வேணாம்.. எனக்கு காருக்குள் போனால் தேவையில்லை. வீட்டில் நிறைய தொப்பிகள் இருக்கின்றன.”

“சரிவேணாம்எண்டால்விடவேபோறீர்?” என்று சத்தியன் கொடுத்த தொப்பியை வாங்கி போட்டுக் கொண்டார்.

சத்தியனின் கார் வானூர்தி நிலையத்திலிருந்து புறப்பட்டு எம்.25 ஹைவேயிக்குள் பிரவேசித்தது.

“நல்ல அகலமான ரோடு. போறதுக்கு ஒரு பாதை வாறதுக்கு ஒருபாதை ஒரு பிரச்சினையும் இல்லை. எங்கட ஏ நைனும் இப்போ நல்லா இருக்குதான். நீர் வரும்போது கண்டிருப்பீர்தானே”

“ஓம். நல்லாத்தான் இருக்கு. ஆனால் இப்படி வாறதுக்கும் போறதுக்கும் வெவ்வேறாக இல்லையே. ஒரே ரோட்டு. எப்படி கண்மண் தெரியாமல் ஓட்டுகிறானுகள் நான் வரும்போது உயிரைக் கையில பிடிச்சு கொண்டல்லே வந்தனான்”

“நீர் சொல்றது சரிதான் சத்தியா. கண்டபடி கொன்றோல் இல்லாமல் ஓட்டி, நாள்தோறும் ஆக்ஸிடென்ட். இந்த மோட்டார் சைக்கிள் காறங்க ஆக மோசமா இருக்கிறானுகள். அவனுகள்தான் மேலபோக அதிகமாக டிக்கட் வாங்கிற ஆட்கள். சும்மா தும்பி மாதிரியில்ல பறக்குறானுகள்.

யாழ்ப்பாணத்துக்குள்ளும் பண்ணைப் பாலம் தாண்டியும் இவனுகள் கண்டபடிதான் ஓட்டுறானுகள்” என்று யாழ்ப்பாணம் செல்லும் பாதை பற்றியும் யாழ் மற்றும் தீவுப்பகுதிக்கு செல்லும் பாதை பற்றியும் பேசிக்கொண்டு வர சத்தியனின் வீடும் வந்து விட்டது.

வீட்டுக்குள் வந்ததும், ஹாலில் இசை வாருதி கிருஷ்ணன் அவர்களை இருக்க வைத்துவிட்டு சத்தியன் அவரின் பெட்டிகளைகொண்டுசென்றுவீட்டின்மேல்தளதில் உள்ள ஒரு அறையில் வைத்துவிட்டு, அந்த அறையினை அவசரமாக அழகாக தயார் செய்து கட்டிலில் புதிய விரிப்புகள் எல்லாம் விரித்து தலையணைக்கு புதிய உறைபோட்டு கச்சிதமாக அலங்கரிதபின் கீழே வந்து சொன்னான்

“அண்ணை வாருங்கள் மேலே போவோம் என்று.”

“மேலேயோ என்ன இவ்வளவு அவசரம் இன்னும் கொஞ்சக்காலம் இருந்துவிட்டு போவோமே இப்பதானே எழுபது தாண்டி சில வருடங்கள் ஆகின்றன” என்றார் வழமையான நகைச்சுவையுடன்.

“அங்க போற நேரம் வந்தால் எல்லாரும் போறதுதான் அண்ணே. அது வாற நேரம் வரட்டுக்கும், இப்ப மேல் மாடிக்கு செல்வோம் வாங்க” என்றான் சத்தியன்.

சத்தியனும் ஈட்டிக்கு போட்டியாக நகைச்சு

வையுடன் பேசக்கூடியவனே.

"இதுதான் உங்கள் அறை. உங்கள் பெட்டிகள் இங்கே இருக்கின்றன. நீண்ட பிரயாணம் அல்லே. நல்ல உடல் களைப்பாக இருக்கும். எதிரே குளியல் அறை இருக்கிறது. உடுப்பு மாற்றி, குளித்து விட்டு ரெடியாகுங்கள் நான் கீழே போய் சாப்பாடு செய்யிறன்."

"என்ன சாப்பாடு செய்யப்போகிறீர் பிரியாணியா, அல்லது சோறு கறியா"

"நக்கல்தானே.. இல்ல இது நக்கல்தானே... நான் என்ன சாப்பாடு செய்யமாட்டன் என்று நினைத்து கதைக்கிறீங்க. அப்படித்தானே பாருங்கள் எப்படி ஒரு உப்புமா கிண்டுகின்றேன் என்று"

"சரி சரி கிண்டு கிண்டு. ஆனால் தண்ணி வராமல் பார்த்துக்கொள் இல்லாட்டி தண்ணி வந்திடும்"

"சிவா சிவா. இந்த கிருஸ்ணனை காப்பாற்று" என்ற சத்தியன் கீழே இறங்கி வந்து சமையலறையில் இரவுச் சாப்பாடு செய்யத் தொடங்கினான். அவன் சொன்னபடி உப்புமாதான் செய்தான். இதை செய்வதற்கு அவன் தனது மறைந்த மனைவியிடம் கற்றுக் கொண்டிருந்தான் .

கிருஷ்ணன் அவர்கள் குளித்து முடித்து, உடைமாற்றிக்கொண்டு கீழே வரவும் சத்தியன் சுடச்சுட அவருக்கு முதலில் தேநீர் போட்டு கொடுத்து, தானும் ஒரு கப்பில் எடுத்துக்கொண்டு ஹாலுக்கு வந்து தேநீர் அருந்திக்கொண்டே பேசினார்கள்.

"சொல்லுங்க அண்ணே பிரகாஷ் எப்படி நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருக்கிறாராம்? அது பற்றி உங்களிடம் சொல்லி இருக்கிறாரா?"

"அவர் ஒரு நிகழ்ச்சி ஒழுங்கு செய்திருக்கிறார். நாளை மறுநாள், அது சனிக்கிழமை இல்லையா?"

"ஓம் சனிக்கிழமைதான். நாளைக்கு வெள்ளிக்கிழமை நான் ஊடகங்களுக்கு சொல்லி இருக்கின்றேன்.

தொலைக்காட்சி பேட்டி நிகழ்ச்சி ஒன்று இருக்கின்றது. அதற்கு செல்வோம் சரி தானே. பேந்து நிகழ்ச்சி முடிந்த பின் லண்டனை சுற்றிப் பார்ப்போம்."

"பார்ப்போமோ இல்ல சுற்றிக் காட்டுறதா?"

"அண்ணே நாங்களும் இப்படி உங்களைப் போல யாரும் லண்டனுக்கு வரும்போது தான் லண்டன் பார்க்கிறது கண்டியளோ. இல்லாட்டிக்கு எங்களுக்கு ஏது நேரம். வந்தவையோட நாங்களும் கொண்டு காட்டுற சாட்டில் பார்க்கிறதுதான்"

"அப்பிடியே.. அப்ப சரி பார்ப்போம். முதலில் நிகழ்ச்சி நல்லபடி முடியட்டும்" என்று அவர் சொல்லும்போதே சத்தியனின் அலைபேசி அலறியது.

"வணக்கம் சத்தியன்.."

"ஆ சொல்லுடாப்பா. நாங்கள் வந்து சேர்ந்து விட்டோம். அண்ணையும் குளித்து வந்து ரிலாக்ஸ் பண்ணுறார் இனி சாப்பிட்டுவிட்டு அவரை படுக்கைக்கு அனுப்பத்தான். ஆ.. சரி கொடுக்கிறன்" என்ற சத்தியன் அலைபேசியை கிருஷ்ணன் அவர்களிடம் கொடுத்தான்.

"ஹலோ. ஆ சொல்லுங்க பிரகாஸ். ஆ.. இங்கு நல்ல வசதியாக இருக்கிறன். சத்தியனோடு இருப்பதால் எனக்கு சந்தோஷம். சாப்பாடோ. இங்கு எல்லாம் அந்தமாதிரி இருக்கு. நீங்க சனிக்கிழமை நிகழ்ச்சிய நல்லபடி செய்யப் பாருங்கள்"

"ஓம் ஐயா.. நாளைக்கு உங்கள் பாடல்களை பாடும் பாடகர்களை ரிஹர்சல் பார்க்க வரச் சொல்லி இருக்கிறன். நீங்கள் சத்தியன் அண்ணாவுடன் டிவி இன்டர்வியூக்கு செல்லுங்கள். எல்லாம் நல்லபடியாக நடக்கும் நான் பார்த்துக்கொள்கிறன்"

"சரி அப்பு நாளைக்கு நான் சத்தியனோடு தொலைக்காட்சி நிலையத்திற்கு செல்கிறேன் பை" என்று பேசி கட் பண்ணிக் கொண்டார்.

நேரம் சற்று சென்றதும் இரவு சாப்பாடு முடித்து இருவரும் தூங்க போனார்கள்.

அடுத்தநாள் சத்தியன் இசை வாருதி கிருஷ்ணன் அவர்களை கூட்டிக்கொண்டு லண்டன் தமிழ் தொலைக்காட்சி நிலையத்திற்கு சென்றான். இவர்களுடன் சத்தியனின் நண்பன் சேகரும் இணைந்துகொண்டான்.

சேகரும், இசைவாருதி கிருஷ்ணன் அவர்களும் தாயகத்தில் பரீட்சயமானவர்களே. சேகரும் ஊடகத்துறை, வானொலி, தொலைக்காட்சி என்று பணிபுரிந்துவிட்டே வந்தவன். கவிஞர், பாடகர், நடிகர் என்று பன்முகத் திறமை கொண்டவன்.

தொலைக்காட்சி நிலையத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் தம்பா அவர்கள் வரவேற்றுக் கொண்டார்.

பின்னர் நேர்காணல் நிகழ்ச்சி இடம் பெற்றது. அந்த நிகழ்ச்சியில் மிக சுவாரசியமான கேள்விகளை கேட்டார் நிகழ்ச்சி தயாரிப்பாளர். குறிப்பாக கிருஷ்ணன் அவர்களின் இசைபயணம் எப்படி? எப்போது தொடங்கியது? ஆரம்பத்தில் கோவில் திருவிழா காலங்களில் ஊரூராக சென்று கச்சேரி செய்வதையும் அந்த நேரம் கொடுக்கப்பட்ட கொடுப்பனவு எவ்வளவு என்ற தகவல்கள். பாடகர்களை எப்படி தெரிவு செய்து கோஷ்டியில் இணைத்த தகவல்கள். எல்லாம் பேசப்பட்டன.

தயாரிப்பாளரின் மற்ற கேள்விகள் ஈழத்து மெல்லிசையில் இசையமைப்பாளரின் பங்கு பற்றியும் அதன்பின் கொழும்பில் தாள வாத்திய கலைஞர் காந்தன் அவர்களை சந்தித்துஅவரைதன் கோஷ்டியில் இணைத்து கிருஷ்ணன் காந்தன் இரட்டையர் குழு என்று பல ஈழத்து பாடல்கள் செய்தது பற்றியும், ஈழத்து திரைப்படங்களுக்கு இருவரும் சேர்ந்து இசை அமைத்தமை பற்றியும் இருந்தன.

இந்த கேள்விகளுக்கெல்லாம் மிக தெளிவான பதில்கள் கிருஷ்ணன் அவர்களால் வழங்கப்பட்டன. இடையே நிகழ்ச்சி தயாரிப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்க இசையமைத்த படத்திலிருந்து ஒரு பாடலும் கிருஷ்ணன் அவர்களால் பாடப்பட்டது.

இறுதியாக லண்டன் மாநகருக்கு முதன் முதலாக எமது தாயக இசைக்கலைஞர் ஒருவரை வரவழைத்து அவருக்கு மதிப்பளிக்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யும் நல்ல உள்ளங்களை பாராட்டுவதாகவும் நாளை சனிக்கிழமை நடைபெற இருக்கும் நிகழ்ச்சி இனிதே நடந்தேற லண்டன் தமிழ் தொலைக் காட்சி வாழ்த்துவதாகவும் சொல்லி பேட்டியை முடித்து கொண்டார் தயாரிப்பாளர் தம்பா அவர்கள்.

லண்டன் தமிழ் தொலைக்காட்சி நேர்காணல் நல்லபடியாக நடந்ததில் சத்தியனுக்கும் சேகருக்கும் மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியோடு வீடு வந்து சேர்ந்தார்கள். அன்று இரவு ஒரு ரெஸ்டாரென்ட்டில் பல நண்பர்கள் சேர்ந்து கிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு இரவு விருந்து கொடுக்க இருந்தார்கள்.

அன்று மாலை அதுவும் மிக நன்றாக நடந்து முடிந்தது.

சனிக்கிழமை மேற்கு லண்டனில் உள்ள ஓர் அரங்கில் நிகழ்ச்சிக்குரிய ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

நிகழ்ச்சிக்கான நுழைவுச் சீட்டுகள் பெரும்பாலும் முன்னரே விற்கப்பட்டு இருந்தன.

அதனால் கூட்டம் மண்டபத்தினுள் நிறைந்து கொண்டு இருந்தது. மேடையில் வாத்திய கலைஞர்கள் தங்கள் வாத்தியங்களை சரிசெய்து கொண்டு இருந்தார்கள்.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் எழுத்து ஊடகவியலாளர்கள் எல்லோரும் வந்து இருந்தார்கள். சத்தியனின் வீட்டிலிருந்து இன்றைய விழாவின் நாயகனை அழைத்துக்கொண்டு சத்தியனின் கார் புறப்பட்டது. ஒருமணி நேர பயணத்தின் பின்னர் நிகழ்ச்சி நடக்கும் அரங்கத்து கார் தரிப்பு இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே நிறைய கார்கள் பார்க் பண்ணப்பட்டு இருந்தன.

அதைப் பார்த்ததும் சதியனுக்கும் சேகருக்கும் மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியோடு விழா நாயகனை அழைத்துக் கொண்டு அரங்கிற்குள் சென்றார்கள். விழாவின் அமைப்பாளர் நிகழ்ச்சி தொகுப்பாளர் இன்னும் பலர் வரவேற்றுக் கொண்டார்கள்.

முன் வரிசையில் போடப்பட்டு இருந்த ஒரு சிறப்பு இருக்கையில் இசைவருதி கிருஷ்ணன் அவர்கள் அமர்த்தப்படுகின்றார்.

நிகழ்ச்சித் தொகுப்பாளர் அவர்கள் இவர்கள் மூவருக்கும் தெரிந்தவர். அங்கு வந்திருந்த அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு திரு. கிருஷ்ணன் அவர்களை நன்கு தெரியும். அனைவரும் அறுபதுகளில் கோவில் திருவிழாக்களில் அவரவர் ஊர்களில் இவரின் இசையைகேட்டும் இவர் அந்த காலத்தில் வாசித்த எக்கோடியன் வாத்தியத்தை கண்டும் களித்தவர்களே. இன்று இந்த அரங்கில் இவரைக் கண்டதும் மிகவும் சந்தோசப்பட்டார்கள்.

நிகழ்ச்சி தொடங்கியது. தொகுப்பாளர் பேசினார்.

"வணக்கம் அன்பு உறவுகளே.மிக்க மகிழ்ச்சியுடன் உங்களை வரவேற்றுக் கொள்கின்றோம். முதல் முறையாக ஈழத்து இசைக் கலைஞர் ஒருவரை இந்த லண்டன் மா நகருக்கு வரவழைத்து அவருக்கு மதிப்பும் கௌரவமும் செய்ய போகின்றோம்.

இந்த நிகழ்வுக்காக திரளாக வந்திருக்கும் உங்கள் அனைவரையும் மீண்டும் இந்த விழா ஏற்பாட்டாளர் திரு. பிரகாஷ் அவர்கள் சார்பில் வற்றவேற்று மகிழ்கின்றோம். திரு. பிரகாஷ் அவர்களுக்கும் உங்கள் சார்பாக நன்றியை கூறுவோம்.

ஒரு ஈழத்துக் இசைக் கலைஞர் கண்டிப்பாக அவர் வாழும் காலத்திலேயே கௌரவிக்க படவேண்டும் என்று எண்ணி அவரை இங்கு வரவழைத்து உங்கள் மத்தியில் உங்கள் ஆதரவோடு அவருக்கு மதிப்பளிப்பது பாராட்டத்தக்கது. இதுவரை காலமும் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கே வாசம் இருக்கும் என்று நினைத்து எங்கள் முற்றத்து மல்லிக்கையை முகராமல் விட்டு விட்டோம்.

தமிழ் நாட்டு பாடகர்கள், நடிகர்கள் என்றால் அவர்களை முண்டி அடித்து வந்து பார்த்துப்போன எம்மவர்கள் இன்று முதல் முறையாக பெரும் திரளாக இசைவாருதி கிருஷ்ணன் அவர்களை காணவும் அவருக்கு கௌரவம் செய்யவும் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

சரி இப்போது இவர் இசையமைத்த பல பாடல்களை இந்த மேடையில் பாடகர்கள் பாட இருக்கின்றார்கள் அவற்றை முதலில் கேட்போம்" என்ற தொகுப்பாளார்.

அரங்கின் பலத்த கரவொலிக்கு மத்தியில் முதல் பாடகரை அழைத்தார். அப்படி பல பாடகர்கள் சிறப்பாக இவரின் பாடல்களை மேடையில் பாடினார்கள். அதை கேட்டு மன மகிழ்ச்சியுடன் இருந்தார் கிருஷ்ணன் அவர்கள். அவருக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் இருந்த பரவசம் அது.

இனி விழாவின் உச்சக்கட்டம் இசை வாருதி மதிப்பளிக்கப்படல்.

மேடையில் முக்கிய ஒருசிலர் இருக்க மக்களின் பலத்த கரகோசத்திற்கு மத்தியில் திரு.கிருஷ்ணன் அவர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டு சிம்மாசனம் மாதிரியான ஒரு இருக்கையில் அமரவைக்கப்பட்டார்.

அதன் பின் நிகழ்ச்சி அமைப்பாளர் பிரகாஷ் உரை நிகழ்த்தினார். அவரும் தனது உரையில், இதுவரை காலமும் இங்கு தென்னிந்திய கலைஞர்கள்தான் வந்து போய் கொண்டிருந்தார்கள். அவர்களை இங்கு அழைப்பதற்கு பெரும் செலவு செய்ய வேண்டி வரும். விமானத்தில் முதல் வகுப்பு இருக்கை தொடக்கம்.

இங்கு தங்க ஐந்து நட்சத்திர விடுதிவரை கொடுக்க வேண்டி இருந்தது. ஒருசில விதி விலக்கு இருக்கலாம். இப்போதுள்ள சுப்பர் சிங்கர்கள் கூட இப்படிதான் எதிர்பார்க்கின்றார்கள்.

இவர்களை விட எங்கள் நாட்டு கலைஞர்களை ஏன் கூப்பிட்டு எமது கலை வடிவத்தையும் ரசிக்க முடியாது என்ற எண்ணம்தான் என்னை, ஐயா கிருஷ்ணன் அவர்களை இங்கே அழைக்க தூண்டியது. தொகுப்பாளர் சொன்னதுபோல் எங்கள் முற்றத்து மல்லிகைக்கும் மணமிருக்கின்றது என்பதை இன்று நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த மேடையில் இசைக்கப்பட்ட அனைத்து பாடல்களும் தென்னிந்திய பாடல்களுக்கு இணையானவையே.

இப்படியான பாடல்களை தந்த ஐயாவை பாராட்டி மதிப்பளிப்போம்" என்று கூறி அவரை மேடையின் முன்னுக்கு அழைத்து பொன்னாடை போர்த்தி, பாராட்டு பத்திரம் வழங்கி, பொற்கிழியும் கொடுத்து பெரிய அளவில் கௌரவம் செய்தார்கள்.

சிறப்பு அதிதிகள் கூட பேசினார்கள். அவர்களும் தாய்நாட்டுக் கலைஞர்கள் அடிக்கடி இங்கு வரவழைக்கப்பட்டு பாராட்டப்படவேண்டும் என்ற கருத்தையே முன் வைத்தார்கள்.

கடைசியில் திரு.கிருஷ்ணன் அவர்களின் ஏற்புரை இருந்தது. அவர் தன் உரையில், "இந்த வயதில் என்னை இவ்வளவு தூரம் வரவழைத்து கௌரவம் செய்தமைக்கு நன்றி. புலம்பெயர்ந்து வாழுகின்ற எமது மக்கள் மனங்களில் நான் இன்னும் இருப்பது நெகிழ்ச்சியுடன் கூடிய மகிழ்ச்சி தருகின்றது.

என்னை இங்கு வரவழைத்த தம்பி பிரகாஷ், என்னை நன்றாக பார்த்துக் கொண்ட சத்தியன் ஆகியோருக்கும் நன்றி. இந்த நிகழ்வை என் வாழ்நாளில் என்றும் மறக்கப் போவதில்லை" என்று தன் ஏற்புரையை முடித்துக்கொண்டார்.

அதை தொடர்ந்தும், பல பாடல்கள் இசைக்கப்பட்டன. நான்கு மணி நேரத்திற்குப்பின் நிகழ்ச்சி மிக வெற்றியுடன் நிறைவுக்கு வந்தது. முடிவில் பலர் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார்கள்.

எல்லோரையும் சந்தோசப்படுத்திவிட்டே சத்தியனும் சேகரும் ஈழத்து இசைவாருதி, நமது முற்றத்து மல்லிகையை அழைத்துக் கொண்டு வீடு சென்றார்கள்.

செல்லும்போது வழமைபோல் காருக்குள் கிருஷ்ணன் அவர்களின் நகைச்சுவையும் சத்தியனின் பதிலடியும் இருந்தது.

சேகருக்கு கொண்டாட்டம் தான்.அதே நேரம் தாயாக கலைஞன் ஒருவன் கௌரவிக்கப்பட்டான் என்ற பெருமிதம் அவர்கள் இருவருக்கும் இருந்தது.

# மட்டக்களப்பில் காய்ச்சப்பட்ட உப்பு



சஞ்சீவி சிவகுமார்


பண்டைக் காலத்தியிருந்து உப்பு மிக முக்கியமிக்க ஒரு பொருளாக இருந்து வருகிறது. ரோமானியப் படை வீரர்களுக்கு சம்பளமாக உப்பு வழங்கப்பட்ட குறிப்புகளை வரலாறுகளில் காண முடியும். பண்டமாற்றுப் பொருளாகவும் நாணயத்திற்குப் பதிலாகவும் உப்பே அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

இலங்கையில் முக்கியமிக்க உற்பத்திப் பொருளாக உப்பு பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆயினும் இதனை ஆங்கிலேயர்கள் தம் ஆட்சிக் காலத்தில் முறைமைப்படுத்தினர்.

பிரித்தானிய இலங்கையில் உப்புக்கான ஏகபோக உரிமை அரசிடமே இருந்தது. ஏறக்குறைய 10 சதவீதமான அரச வருமானத்தை உப்பு விற்பனை மற்றும் உப்பு ஏற்றுமதி மூலம் பிரித்தானிய ஆட்சியாளர்கள் பெற்றுக் கொண்டனர்.

இதனால் ஆங்கிலேய அரசு தனியார் உப்பு தயாரிப்பில் ஈடுபடுவதை சட்டத்தில் மூலம் தடுத்தனர். தனியார் உப்புக் காய்ச்சுவதை தடுப்பதற்கு நடைமுறையில் இருந்த சட்டத்தை அமுல்படுத்த அக்கால கிராம மட்ட அதிகாரிகளான விதானைமார் செயற்பட்டனர்.

விதானைமார்களின் செயற்பாடுகள் பற்றி அக்காலத்தில் வழக்கிலிருந்த சொலவடை ஒன்றில் 'உப்புக் காய்ச்ச விடுவதுமில்லை, பிச்சைக் காசைத் தருவதுமில்லை' என வழங்கப்பட்டது.



மகாத்மா காந்தி இத்தகைய உப்பு தயாரிப்பு தடைச்சட்டத்திற்கு எதிராக 1930களில் உப்புச் சத்தியாகிரக போராட்டம் நடத்தினார்.

ஆயினும் மட்டக்களப்பில் வாவிக் கரைகளில் உவர்நீர் ஏறிய பின் வற்றிய பிரதேசங்களில் உள்ள மண்ணை பனையோலையால் செய்யப்பட்ட கடகம் அல்லது கைப்பெட்டிகளில் ஏற்றிக் கொணர்ந்து இரகசியமாக உப்புக் காய்ச்சினர். இது சீனி உப்பு அல்லது காய்ச்சிப்பு எனப்பட்டது. உப்பு மண்ணை மண் சட்டியில் இட்டு நீரூற்றி உப்பு நீரை வேறாக்கிய பின் அதனைக் காய்ச்சுவதன் மூலம் காய்ச்சுப்பு தயாரிக்கப்படும். இவ்வாறு காய்ச்சப்படும் உப்பை விற்பனை செய்வர் அல்லது தம் உறவுகளுக்கிடையில் பகிர்ந்து மகிழ்வர்.

சாதாரண உப்பை விடச் சுவை மிகுந்ததாக காய்ச்சுப்பு மக்களிடையே பிரபலம் பெற்றிருந்தது.

சரித்திரப் பார்வை

# காலன் கருக்கிய பிஞ்சு உள்ளம்

## மோகனதாஸ் மறக்கமுடியாத எழுத்து ஆளுமை




துறைநீலாவணையினைச் சேர்ந்த ஆசிரியரும் ஊடகவியலாளருமான பாக்கியராசா மோகனதாஸ் சனிக்கிழமை இரவு காலமானார்.

இளம் ஊடகவியலாளரான இவர் குறுகிய காலத்தினுள் வீரகேசரியின் களுவாஞ்சிகுடி நிருபராகவும், தினகரன் பத்திரிகையின் மண்டூர் குறுப், தமிழன் பத்திரிகையின் வீரமுனை நிருபராக தனது ஊடகப் பயணத்தினை ஆரம்பித்த இவர் இலங்கையில் வெளிவருகின்ற பிரபல நாளிதழ்களில் பல வருட காலமாக கட்டுரைகள், அரசியல் வாதிகளின் பேட்டிகள், கலைஞர்களின் படைப்புக்கள் என பல்வேறு விடயங்களை வெளிக்கொண்டு வந்த பல்துறைக் கலைஞரான இவருக்கு பல வருடங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாண இளம் ஊடகவியலாளர் விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

முக்கிய பிரபலங்களை இவர் பேட்டி கண்டது மட்டுமல்ல, அதனை ஒரு தொகுப்பு நூலாக வெளியிட்டிருக்கிறார்.



அண்மையில், திருகோணமலையில் இதன் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதுவே அவர் கடைசியாக கலந்துகொண்ட பொது நிகழ்வாகும்.

சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார். அன்னாரின் இறுதிக்கிரியை ஞாயிற்றுக்கிழமை துறைநீலாவணை பொது மயானத்தில் நடைபெற்றது.

## ஏற்க மறுக்கிறது என் உள்ளம்

அவனது இழப்பை ஏற்க மறுக்கிறது என் உள்ளம். துடிப்புள்ள மிகவும் உற்சாகமான ஒரு ஊடகவியலாளனை நாம் இழந்திருக்கிறோம்.

ஆசிரியத் தொழிலில் இவர் இருந்தாலும், அல்லும் பகலும் நேசித்தது எல்லாம் ஊடகத்துறையைத் தான். பழுத்த மூத்த ஊடகவியலாளர்கள் எல்லாம் இருக்கின்ற பொழுதும், நவீனத்துவத்துக்குள் தன்னை உள்வாங்கி, ஊடகனாக பிரகாசித்தவர் தம்பி மோகனதாஸ்.

பல்துறை ஆளுமை கொண்ட இவர், கால வளர்ச்சிக்கேற்ப அச்சு ஊடகத்தையும் நவீனத்துக்குள்

புகுத்தியே ஆகவேண்டுமென்று அர்ப்பணிப்போடு செயல்பட்ட ஒரு துடிப்புள்ள இளைஞன் இவர்.

சந்திக்கும்போதெல்லாம், ஊடகத்துறையை தவிர்த்து எதையும் அவர் பேசியது இல்லை.

வாழ வேண்டிய வயதில் சமூக சிந்தனையாளர் ஒருவனை நாம் இழந்து இருப்பது வேதனை அளிக்கிறது.

திருகோணமலையில் அண்மையில் தான் நூல் ஒன்றை வெளியிட்டார். இந்த வயதில் அவரது அர்ப்பணிப்பான உழைப்பை படம்போட்டு காட்டும் நூல் தான் அது.

தம்பி மோகனதாஸ், உன் பேச்சில் அவசரம் இருந்தது. சிலவேளை நீ பேசுவது எனக்கு மழலையாகவே இருக்கும். உன் கொஞ்சும் மொழியும் பிஞ்சு முகமும் என் இதயத்தை கனக்க வைக்கிறது.

என்ன செய்ய... கண் கெட்ட காலன் உன்னை கவர்ந்து விட்டான்.

தம்பி சென்று வா... சொரிந்து ஓடும் கண்ணீரோடும் விம்மும் நெஞ்சோடும் உனக்கு விடை கொடுக்கிறோம்.

வழமைபோன்று ஒன்றை நான் சொல்கிறேன்- ஆழ்ந்த அனுதாபங்கள். உன் ஆத்மா சாந்தி அடையட்டும்.

குணா



# பாடசாலைகளுடன் இணைந்து செயல்படுவதில் பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வு



பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை (19.04.2022) அன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது கல்முனைத் தமிழ் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளிலும் வெகு விமரிசையாக இடம்பெற்றது. குறித்த தினத்திற்கு ஒரு வாரம் முன்பிருந்தே பெற்றோர் தமது பிள்ளைகளுக்காக பாடசாலைகளில் வகுப்பறைகளை ஒழுங்கு செய்யும் வேலைகளை மிகவும் ஆர்வத்துடன் செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

தற்போது பாடசாலைகளுடன் இணைந்து தாமும் பாரியளவில் பங்களிப்புகளை நல்குவதன் ஊடாக தமது பிள்ளைகளின் சிறப்பான எதிர்காலத்திற்கு வித்திட முடியும் எனும் விழிப்புணர்வு,பெற்றோர் மத்தியில் ஏற்பட்டுள்ளமை மிகவும் வரவேற்கப்பட வேண்டியதொரு விடயமாகும்.



கல்முனைத் தமிழ் கல்விக் கோட்டத்தின் ஒவ்வொரு பாடசாலையிலும் வெவ்வேறு ஆக்கபூர்வமான வழிமுறைகளில் மிகவும் சிறப்பாக புதிய மாணவர்கள் வரவேற்கப்பட்டனர். புதிதாகப் பாடசாலை செல்லுதல் பற்றிய அச்சம் அனேகமாக எந்த மாணவனிடமோ அல்லது மாணவியிடமோ காணப்படவில்லை என்பது இவ்வாறான புதிய வரவேற்பு வழிமுறைகள் ஊடாக ஏற்படுத்தப்பட்ட ஒரு மிகச்சிறந்த மாற்றம் என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வின் பின்னர் பிள்ளைகளை சிறப்பாக வழிநடாத்துதல் தொடர்பாக பெற்றோருக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட விழிப்புணர்வுக் கூட்டத்தில் குறித்த பாடசாலையின் பிரதி அதிபர் பா. சஜிந்ரன் ஆற்றிய உரையில் இருந்து சில முக்கிய பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

“பல்வேறுபட்ட கனவுகளுடன் பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளில் அனுமதிக்கின்றனர். காலம் கடந்து செல்கின்றபோது பல பிள்ளைகளின் இலட்சியங்கள் தேய்ந்து போவதையும் பல பெற்றோர்களின் கனவுகள் மெல்ல மெல்லக் கலைந்து போவதையும் நாம் யதார்த்தத்தில் காண்கின்றோம். பிள்ளை வளர்ப்பு என்பதும் பிள்ளையை ஒரு மிகச் சிறந்த பிரஜையாக ஆக்குவது என்பதும் மிக இலகுவான விடயங்கள் அல்ல. ஆசிரியர்களும் பெற்றோர்களும் மிகக் கவனமாக கண்காணித்து மிகக் கவனமாகத் திட்டமிட்ட முறையில் இயங்கினால் மட்டுமே ஒரு பிள்ளையை மிகச்சிறந்த நிலைக்குக் கொண்டுவரமுடியும்.



சிறப்பான கல்வி என்பது ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கின்ற உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொண்டு வருவதாக அமைய வேண்டும். எல்லாப் பிள்ளைகளிடத்திலும் ஒரே மாதிரியான திறமைகள் இருக்கும் என்பது ஒருபோதும் எதிர்பார்க்கக்கூடிய விடயமல்ல.

ஒரு குறிப்பிட்ட பாடத்தில் ஒரு பிள்ளைக்கு இருக்கின்ற திறமை அதே பாடத்தில் இன்னுமொரு பிள்ளைக்கு இல்லாது போகலாம். இந்த நிலையில் அந்த ஒரு பாடத்தில் உள்ள திறமையை வைத்துக்கொண்டு அந்தப் பிள்ளையை இன்னுமொரு பிள்ளையுடன் ஒப்பிடுவதோ குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக கல்வியைத் திணிப்பதோ பொருத்தமற்ற அணுகுமுறைகள் ஆகும்.

சமூகம் என்பது தனியே வைத்தியர்களை மட்டுமோ அல்லது பொறியியலாளர்களை மட்டுமோ கொண்டு உருவானது அல்ல. வெவ்வேறு வகையான தேர்ச்சிகளைக் கொண்ட பிரஜைகள் சமூகத்தில் இருக்க வேண்டியது அவசியமாகும்.

ஒரு பொறியியலாளராகவோ அல்லது ஒரு வைத்தியராகவோ ஆகாவிட்டால் எதிர்காலத்தில் வாழ்க்கையே இல்லை எனும் எண்ணக்கருவை பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் மனதில் பதிய வைப்பது எவ்வளவு அபத்தமானது.

**புதிய வரவேற்பு வழிமுறைகள் ஊடாக மாணவர்களிடம் மாற்றம்**



தமக்குப் பொருத்தமான துறைகளை இனங்கண்டு அத் துறைகளில் சிறப்புத் தேர்ச்சிகளைப் பெற்று எதிர்காலத்தில் எந்த விதமான சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு சமயம், இனம். நாடு என்ற எல்லைகளைத் தாண்டி மனிதத்துவத்தை மதிக்கின்றவர்களாக சிறந்த விழுமியங்களுடன் வாழ்வைக் கொண்டு நடாத்துகின்றவர்களாக பிள்ளைகள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அந்த மாற்றத்திற்கு வசதி செய்து கொடுப்பதே பெற்றோர்களினதும் பாடசாலைகளினதும் கடமையாக அமைய வேண்டும்.

2010 ஆம் ஆண்டிற்குப் பின் பிறந்துள்ள குழந்தைகளே இப்போது பாடசாலைகளில் இணைந்துள்ளனர். அல்பா பரம்பரை எனும் விசேட பெயரால் அழைக்கப்படும் இவர்கள்,2010 இற்கு முன் பிறந்த குழந்தைகளில் இருந்து அதிக வேறுபாட்டைக் காட்டக்கூடியவர்களாக உள்ளனர். இப்போது பாடசாலைகளில் பணி புரிகின்ற பெரும்பாலான ஆசிரியர்கள் 1960 - 1980 இற்கு இடையில் பிறந்த எக்ஸ் (ஒ) பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவோ 1981- 1996 இற்கு இடையில் பிறந்த மிலேனியப் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவோ உள்ளனர். குணாம்ச ரீதியாக இந்த இரு பரம்பரைகளிலும் இருந்து மிகப்பெரிய மாறுபாட்டைக் காண்பிக்கின்றவர்களாக இந்த அல்பா பரம்பரைக் குழந்தைகள் உள்ளனர். முன்னைய பரம்பரைப்



பிள்ளைகளுக்கான கற்பித்தல் அணுகுமுறைகள் இவர்களுக்குப் பொருந்தியமைவது மிகக் கடினமானது. அதிக இயக்கத் தன்மை கொண்டவர்களாக இருக்கின்ற இவர்களுக்கு அதிகமான செயற்பாடுகள் மூலமாகவும் நவீன இலத்திரனியல் கருவிகள் மூலமாகவும் கற்றலுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதே பொருத்தமாய் அமையும் என்பதால் ஆசிரியர்களும் பெற்றோர்களும் நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசரமானதும் அவசியமானதுமான தேவை உள்ளது.

கட்டுப்பாடுகளையும், ஒழுங்கு முறைகளையும், விழுமியங்களையும் இந்தப் பிள்ளைகள் மத்தியில் கொண்டு செல்வதற்குக்கூட பத்து வருடங்களுக்கு முன்னர் கையாண்ட வழிமுறைகளைத் தொடர்ந்தும் கையாள்வது அதிக விளைவைத் தரப்போவதில்லை என்ற உண்மையை ஜீரணித்துக்கொண்டு புதிய நுட்பங்களைத் தேடுவது காலத்தின் கட்டாயம். இதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும் தம்மை இற்றைப்படுத்தல் செய்ய வேண்டியது மிக அவசியமானதாகும்” இவ்வாறு நீண்ட விளக்கத்தை அவர் விடுத்தார்.

**சசீந்திரன்**



# ஆணாதிக்கமும் சீரழியும் சிறுவர்களின் எதிர்காலமும்



மங்கையர் மகுடம்

ஜெனிதா மோகன்

"சீலையில் முள்ளு விழுந்தாலும் முள்ளு மேல சீலை விழுந்தாலும் முள்ளுக்கு தான் சேதம்", "பொண்டாட்டி செத்தால் புது மாப்பிள்ளை", "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புரிசன்", "ஒரு மனைவியின் சுதந்திரம் கணவனின் காலடியில்" என ஆண்களை உயர்வானவராக பழமொழிகள் தொன்று தொட்டு பேசப்படுகின்றன.

இந்த வகையில் சமூகமயமாக்கப்பட்ட ஆண்கள் தாங்கள் எப்படியும் வாழலாம் என வாழ தொடங்குகின்றனர். இதனால் பாதிக்கப்படுவது பெண்கள் மட்டுமல்ல அவர்களது பிள்ளைகளும் தான்.

பிறந்தபிள்ளையைபார்த்து"சாண்பிள்ளை என்றாலும் ஆண் பிள்ளை" என்கின்றனர். ஒரு பெண் பிள்ளை சிரித்தால் "பொம்பிள சிரிச்சா போச்சு புகையில விரிச்சா போல" என்கின்றனர்.

ஒரு பெண் ஏதாவது கருத்து சொன்னால் "பெண் புத்தி பின் புத்தி" என ஒதுக்குவர். இப்படியாக எல்லா விடயங்களிலும் பெண்களை இரண்டாம் பட்சமாக காட்டியதன் விளைவாக ஆண்கள் வன்முறை புரிபவர்களாகவும் பெண்கள் வன்முறைக் குட்படுபவர்களாகவும்காணப்படுகின்றனர்.

உதாரணமாக, ஒரு பெண்ணை திருமணம் முடித்து அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கும் நிலையில் வேறொரு பெண்ணுடன் தொடர்பினை ஏற்படுத்தி அந்தப் பெண்ணுடன் வாழுகின்றார். ஏற்கனவே தனக்கு பிறந்த மூன்று பிள்ளைகள் தற்போது தொடர்பில் உள்ள பெண்ணின் மூன்று பிள்ளைகள் என பிள்ளைகள் எல்லோரும் உளரீதியாகவும் பாதிக்கப்படுவதுடன் அவர்களது கல்வியில் பாதிப்பு ஏற்படுகின்றன.

அதேநேரம் பொருளாதார ரீதியாகவும் பல்வேறு பாதிப்புகளை சந்திக்கின்றனர். இந்தக் கணவனை நம்பி பல்வேறு நுண் கடன்களை பெற்றுக்கொடுத்த நிலையில் அதனை கட்ட முடியாமலும் பிள்ளைகளுக்குரிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமலும் மனைவி பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கும் போது இந்த கணவன் இன்னொரு பெண்ணுடன் உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் சட்டரீதியாக பல்வேறு சவால்களையும் சமூக ரீதியாக பல்வேறு சவால்களையும் சந்திக்கின்றனர். அவசர நிலைமைகளை சரி செய்ய முடியாத நிலையில் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவிக்கும் அந்தப் பெண் உடல் உள ரீதியாக பல்வேறு பாதிப்புகளை சந்திக்கின்றார்.

பிள்ளைகளும் பெற்றோருடைய அன்பு, கருணை, பாசம், பரிவு கிடைக்காமல் பல்வேறு மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். இந் நிலையை உணராத ஆணாதிக்க சிந்தனை உடைய ஆண்களால் சமூகத்தின் பண்புகள் பாதிக்கப்படுகின்றன. சமூக கட்டமைப்பில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

வழமைகள், முறைமைகள், மரபுகள், பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், கலாச்சாரங்கள் போன்றன ஊடாக சமூகத்துக்கு கொண்டு செல்ல வேண்டிய நல்ல விடயங்கள் சீரழிக்கப்படுகின்றன.

இவற்றை எல்லாம் கண்டும் கேட்டும் வளர்ந்துவரும் எமது எதிர்கால சந்ததியினர் இந்த வகையில் சமூக மயமாகும் போது எதிர்கால சமூகமே கேள்விக்குறியாக மாறுகின்றது. இதனால் ஒரு பெண் பாதிக்கப்படுவது மட்டுமன்று அவரது குடும்பம், அவரது சமூகம், அவரவர் வாழுகின்ற நாடு என பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுகின்றன.

எனவே ஆணாதிக்க சிந்தனை ஏற்படுத்தும் விதமான சமூகமயமாதல் சிந்தனையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். 'சேற்றை கண்டால் மிதிப்பான் தண்ணீரை கண்டால் கழுவுவான்' என்ற பழமொழிகள் ஆண்கள் பல்வேறு தவறுகளைச் செய்வதற்கு காரணமாக அமைகின்றது.

கிறிஸ்தவ மதத்தினை சேர்ந்த ஒரு விபச்சாரம் செய்யும் பெண்ணை குற்றவாளியாகக் கொண்டுவந்து ஒரு சபையில் நிறுத்தினார்கள். அந்த சபையில் பல்வேறு சட்ட வல்லுநர்களும் இயேசு கிறிஸ்துவும் இருந்தனர்.

இந்தப் பெண்ணுக்கு தண்டனை கொடுக்க நினைப்பவர்கள் முன்வாருங்கள் என்று கூறினார். முன்வந்தவர்களை பார்த்து இதில் தவறு செய்யாத நபர்கள் யாராவது இருந்தால் இந்தப் பெண்ணுக்கு தண்டனை கொடுக்கலாம் என கூறினார். அப்போது யாருமே முன்வரவில்லை. அதே நேரம் இயேசு கிறிஸ்து ஒரு விடயத்தை முன் வைத்தார்.

"இந்தப் பெண் போல் தவறு செய்யாத ஆண்கள் இல்லை என்று உங்களால் கூற முடியுமா? தவறு யார் செய்தாலும் அது சமூகத்திற்கு கேடான விஷயம். எனவே, இத்தகைய பாவங்களை செய்ய வேண்டாம்" எனக் கூறி அந்தப் பெண்ணை அனுப்பி வைத்தார்.

இது போல் எல்லா மதங்களுமே சமத்துவத்தைப் பேசி இருக்கின்றது. ஆனால் ஜதார்த்தத்தில் ஆண்கள் உயர்ந்தவர்களாகவும் பெண்கள் அடிமைகளாகவும் நடத்தப்படுகிறார்கள்.

பெண்கள் தாயாக, தாரமாக, தோழியாக, மகளாக, சகோதரியாக பல்வேறு பாத்திரங்களுடன் ஒவ்வொரு ஆண்களையும் சார்ந்து இருக்கின்றனர். எனவே ஏனைய பெண்களையும் மதித்து நடத்தும்போது பெண்ணடிமைத்தனம் குறைய வாய்ப்புண்டு. தீய சிந்தனைகளை தவிர்த்து சமூக நலனுக்காக, குடும்பத்துக்காக, தங்களுடைய நாட்டுக்காக குற்றங்களைப் புரியாது வாழ்வதற்கு ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு ஒளிமயமான சூழலை ஏற்படுத்திக்கொடுக்க பெற்றோர்கள் காரணமாக இருக்கவேண்டும்.

# பெண்மையும் உள ஆரோக்கியமும்

ஆரோக்கியமான நிலை என்பது அனைத்து துறைசார் ரீதியிலும் அனைவரும் எதிர்பார்க்கப்படும் ஓர் உன்னதமான அடைவு நிலையாகும். அதனை பொதுவாக மருத்துவம், உடல் நலம் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பது வழக்கமாகும். ஆனால் ஆரோக்கியம் என்பதன் பொருள் எமது சொல், சொயல், வெளிப்பாடு, உறவு முறைகள், கல்வி, பொருளாதாரம், சமுக, கலாசாரம் மற்றும் அரசியல் சார்ந்த துறைகளில் கூட விரிந்த கண்ணோட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியத்தை நாம் உணர முற்படுவதில்லை.

இத்துறை சார் ரீதியில் ஈடுபட்டு நிலையான அபிவிருத்திகளை செப்பனிடும் பொறுப்பாளிகள் ஆண், பெண் எனும் இருபாலாருமே என்பது இதன் அடிப்படை விடயமாகும்.

இவர்களது உடல்சார் விடயங்களில் அக்கரை செலுத்தும் நாம் உளம்சார் ஆரோக்கிய நிலையில் அதிக சிரத்தை எடுக்காத நிலையே எமது பின்னடைவுகளுக்கான மூல காரணமென்றால் அதில் தவறில்லை.

"மனிதஉடம்பில்ஒருசதைபிண்டமுள்ளது அது சீர்பெற்றுவிட்டால் முழு உடலும் சீர்பெற்றுவிடும். அது சீரடைந்துவிட்டால் முழு உடலுமே சீரழிந்துவிடும். அதுதான் உள்ளம் எனும் ஆன்மாவாகும்" என்ற பிரபல்யமான வாக்கு உள ஆரோக்கியத்தின் தேவைப் பாட்டை இரத்தினச் சுருக்கமாக முன்வைத்துள்ளது.

எமது குடும்பக் கட்டமைப்பில் தலைவியான பெண், தன்சார்ந்த அங்கத் தவர்களின் (கணவன், மனைவி, பெற்றோர்) ஆரோக்கியத்திற்கு தேவையான சத்துணவுகள், அன்றாட தேவைகள், உதவிகள் மற்றும் ஒத்தாசைகளை சளைக்காமல் வழங்கிவிட்டு தனது நலனில் பாரமுகமாக இருந்துவிடுவாள்.

அவளது நலனில் அதே அங்கத்தவர்கள் அக்கரை செலுத்த தவறும் பர்ச்சத்தில் அவளை அறியாமலே பல உள நெருக்கடிகள், மன உளைச்சல்கள், இயலாமை, வெறுப்புணர்வு, ஆக்ரோஷமான நடத்தை, மனச்சோர்வு, பதட்டம், மற்றும் சோர்வு போன்ற உள நோய்களுக்கு உள்ளாகி தனது ஆரோக்கியத்தை இழக்கும் நிலை உருவாகி விடுகின்றது.

உளம் சார் நோய்களின் தெளிவின்மையால் அது உடல் சார்ந்த உளமாய நோய்களை உருவாக்கி வாழ்வின் சமநிலையை பாதிக்கும் துரதிஷ்ட நிலையை உருவாக்கி விடுகின்றது.

இதனுடைய வெளிப்பாடுகளின் வகை கணவன்- மனைவி, பெற்றோர்-பிள்ளைகள், குடும்ப- சமூக பிரச்சினைகளாக பரிமாணம் எடுக்கிறது. இதை தடுத்து குடும்ப கட்டமைப்பை சீராக்கத் அதன் தலைமை பொறுப்பாளியான பெண்ணை அதன் அங்கத்தவர்கள் முறையான தேவைகளை, அக்கறைகளை, பராமரிப்பை வழங்க முற்படும் பொது அவளை அறியாத ஓர் திருப்திநிலையை அவள் அடைவாள்.

இதன் வெளிப்பாடுகள் விட்டுக் கொடுக்கும், புரிந்துணர்வு, ஏற்றுக் கொள்ளல், மதிப்பளித்தல், சகவாழ்வு போன்ற உள ஆரோக்கியத்தின் விதைகளை அவளினுள் விதைக்கும். இதனால் சிறந்த வினைத்திறனான குடும்ப நகர்வு வடிவமைக்கப்படும்.

இது வீட்டுக்கு வீடு வாசற்படி போன்ற சுழற்சி முறையாக ஒவ்வொரு வீட்டிலும் உருவாகும் பட்சத்தில் உடல்+உள ஆரோக்கியம் கொண்ட சமுதாயமாக நாம் மாறி இவ்வுலகில் வெற்றியடையலாம்.

இம்திஸாஹஸன்றெளஷான்
உளவள ஆலோசகர்
மருதமுனை

# காலிமுகத் திடல் தன்னெழுச்சிப் போராட்டக் களம்


















S.W.R.D. பண்டாரநாயக்கவின் சிலையில் கட்டப்பட்ட கறுப்புத் துணி !!

















அலரி மாளிகையின் முன்னால்...














# வெற்றியை எட்ட ரஷ்யாவுக்கு முடியாதிருப்பது ஏன்?



## ‘இந்தப் போர் ரஷ்யாவுக்கு கௌரவப் பிரச்சினை ஐரோப்பாவுக்கு இருப்பு பிரச்சினை’

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் இரண்டு மாதங்களை கடந்துள்ள நிலையிலும், நிச்சயிக்கப்பட்ட வெற்றியை அடைந்து கொள்வதில் ரஷ்யா இன்னும் உறுதியடைந்ததாகத் தெரியவில்லை என இராணுவ அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

முழு வீச்சில் புறப்பட்ட ரஷ்யா அடிக்கடி சில இடர்களைச் சந்திப்பதுதான் இதற்கு காரணம் எனவும் நம்பப்படுகிறது. பொருளாதாரத் தடை, முன்னேறும் பாதைகளில் உக்ரைன் பொது மக்கள் கேடயங்களாக நிறுத்தப்படுவது மற்றும் வான், கடற்படைகளுக்குள் வெளிநாட்டு சக்திகள் ஊடுருவுவது என்பனதான், ரஷ்யாவின் வேகத்தை குறைப்பதாகவும் நம்பப்படுகிறது.

இதிலும், ரஷ்யாவின் அயல்நாடுகள் பல, உக்ரைனுக்கு சார்பாக நடந்துகொள்வதுதான் பெரும் தலையிடியாக மாறியுள்ளது. முழு ஐரோப்பாவையும் ஆக்கிரமிக்கும் யுத்தத்துக்கான ஆரம்பமே, உக்ரைனுக்கான படையெடுப்புக்கள் என சில நாடுகள் நம்புவதால், நேட்டோவின் பாதுகாப்புக்களையும் இந்நாடுகள் நாடி வருகின்றன.

இந்நிலையிலேயே, பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் நேட்டோவில் இணைவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன.பெரும்பாலும் மே மாதத்தின் ஆரம்பத்தில் இந்நாடுகள் இந்த அமைப்பில் இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும், ரஷ்யாவின் அயல்நாடுகள் பல, இதில் இணைய விருப்புடனுள்ளதும் ரஷ்யா எதிர்பாராத இடர்வுகள்தான்.

எதிர்பாராத இவ்விடர்களுக்குள் அமெரிக்காவும் முந்திக் கொண்டு “வெகுவிரைவில் உக்ரைன் தலைநகர் கீவில் அமெரிக்க தூதரகம் திறக்கப்படும்“ என்றும் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய கடல் எல்லைகளுக்குள் நுழையும் ரஷ்ய போர்க்கப்பல்கள் குறித்த இரகசியங்கள் வெளியே கசியுமளவுக்கு, அயல்நாடுகளின் உளவுச் சேவைகள் உள்ளதாகவும் நம்பப்படுகிறது.

இது இவ்வாறு இருக்கையில், மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்ட ஐ.நா. செயலாளர் அன்ரனியோ குவாட்டர்ஸ் இப்போது உக்ரைனுக்கு விஜயம் செய்துள்ளார். போரை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் பெரிதளவு வெற்றி ஏற்படவில்லை. காரணம், வெளி நாட்டு சக்திகளின் தலையீடுகளை நிறுத்துமாறு ரஷ்யா முன்வைத்த நிபந்தனையே. இந்த விடயத்தில் ரஷ்யா மிக இறுக்கத்துடனுள்ளதை சில நாடுகளுக்கான எரிவாயு விநியோகம் நிறுத்தப்பட்டதிலிருந்து உணர முடிகிறது.

மேலும், உக்ரைனின் கெரோஷான் பகுதியில் கடுமையான தாக்குதல்களை தொடுத்துள்ள ரஷ்யா, ஏனைய எவற்றையும் பொருட்படுத்தாது முன்னேறும் முடிவில் இறங்கியிருக்கிறது. இந்தத் தாக்குதல்கள் ரஷ்யாவின் எதிரி நாடுகளுக்கான இறுதி எச்சரிக்கையாகவே பார்க்கப்படுகிறது. இவையனைத்தும், அமெரிக்கா தலைமையில், உக்ரைனுக்கு உதவி வழங்கும் கூட்டம் நடைபெற்று முடிந்த கையுடனே ஆரம்பமாகியுள்ளன.

உக்ரைன் போரில் எந்த நாடேனும் தலையிட முயன்றால் “மின்னல் வேகத்திலான” பதிலடி ஒன்றுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

“யாரும் பெருமை கொள்ள முடியாத அனைத்து கருவிகளும் எம்மிடம் உள்ளன. தேவைப்பட்டால் அவற்றை பயன்படுத்துவோம்” இவ்வாறு ம் அவர் குறிப்பிட்டுள்ளார். பலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்களை குறிப்பிடுவதாக அவரது இந்தக் கருத்துக்கள் இருந்தன.

உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் மேற்கு நாடுகள் “நெருப்பில் எண்ணெய்யை ஊற்றுவதாக” ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் இந்த வார ஆரம்பத்தில் கூறினார். அத்துடன், இந்த மோதல் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும் எனவும் அவர் எச்சரித்திருந்தார்.

இந்நிலையில் செயின்ட் பீட்டர்ஸ்பேர்க்கில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கடந்த புதன்கிழமை உரையாற்றிய புட்டின், “உக்ரைனுக்குள் வெளியில் இருந்து யாரேனும் தலையிட முயன்று, ரஷ்யாவுக்கு மூலோபாய அச்சுறுத்தலை ஏற்படுத்தினால் எமது பதிலடி மின்னல் வேகத்தில் இருக்கும்” என்று எச்சரித்தார்.

அணுசக்தி கொண்ட அதிவேக, புவியீர்ப்பு ஏவுகணைகளை ரஷ்யா அண்மையில் சோதித்திருந்தது. அவற்றை இடைமறிக்க மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் தோல்வியடையலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்தப் போரைப் பொறுத்தவரை ரஷ்யாவுக்கு கௌரவப்பிரச்சினையாகவும், ஐரோப்பாவுக்கு இருப்புக்கான பிரச்சினையாகவும் உள்ளது. இதனால்தான், அமெரிக்காவும் ஐரோப்பாவை பலப்படுத்த முன்வந்துள்ளது.

உலகின் ஏகபோக உரிமைகளை சிரமமின்றி அனுபவிக்க விரும்பும் அமெரிக்கா, இது போன்று பல முடிச்சுக்களின் பிடிகளை தன்னிடம் வைத்திருப்பது தெரிந்ததே! தென்னமெரிக்கநாடுகளில்வெனிசூலாவைமட்டந்தட்ட ஏனைய நாடுகளுக்கு உதவுவது, மத்திய கிழக்கில் ஈரானை பணிய வைக்க அரபுநாடுகளுடன் உறவுடனிருப்பது. வடகொரியாவை அடக்கிவைக்க, தென்கொரியாவை தூக்கிப் பிடிப்பது என்பவை இவற்றில் சிலவாகும்.

இதுபோன்றுதான், உக்ரைன் போரில் ரஷ்யா வெல்வது, ஐரோப்பாவிலுள்ள அமெரிக்க நலன்கள் அனைத்தையும் நெருப்பிலிடுவதற்குச் சமமென அமெரிக்கா கருதுகிறது.

ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யும் எரிவாயுக்களுக்கான கொடுப்பனவுகளை யூரோவிலோ அல்லது டொலரிலோ தரப்படுவதை அண்மையில் ரஷ்யா நிராகரித்திருந்தது. ஏற்றுமதிக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் ரஷ்யாவின் சொந்த நாணயமான ரூபிளில் தருமாறு மொஸ்கோ கேட்டுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# ஆங் சாங் சூகி மீதான அடக்குமுறைகள்

## எல்லைமீறுவதாக ‘ஏசியான்’ கவலை



மியன்மார் இராணுவ அரசாங்கம் அந்நாட்டின் முன்னணி அரசியல்வாதியான ஆங் சாங் சூகிக்கு மற்றொரு சிறைத் தீர்ப்பை வழங்கியுள்ளது. இத்தீர்ப்பின் பிரகாரம் அவர் இன்னும் ஆறு வருடங்களுக்கு சிறைக்கு அனுப்பப்பட உள்ளார். ஏற்கனவே, வெளியான தீர்ப்பு ஒன்றில் இவருக்கு ஐந்து வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

சமாதானத்துக்கான நோபல் பரிசு வென்ற ஆங் சாங் சூகி, மியன்மார் அரசியலில் மிகப் பிரபலமான முன்னணி அரசியல்வாதி. பல தடைகள், சவால்களை வெற்றிகொண்டு அந்நாட்டின் பிரதமராகவும் இவரால் வர முடிந்திருக்கிறது.

இவ்வாறு இரு தடவைகள் ஆட்சியின் உச்சத்துக்கு வந்தாலும், அப்பதவியில் நிலைத்திருக்க முடியாமலிருக்கிறது. ஜனநாயக அரசியலுக்கு எதிரான சக்திகள் இவரை விட்டபாடுமில்லை. 76 வயதுடைய இவர், கடைசியாக பதவிக்கு வந்து, 2021 இல் பதவி கவிழ்க்கப்பட்டார்.

அந்நாட்டு இராணுவம் இவர்மீது பல பழிகளைச் சுமத்தி இவரைப் பதவிகவிழ்த்தது. இதனடிப்படையில், 2021 பெப்ரவரி 11 இல், ஆட்சியிலிருந்தவாறே இவரை, இராணுவம் பதவி கவிழ்த்ததுடன் முக்கிய சில அமைச்சர்களையும் கைது செய்து எவருக்கும் தெரியாத இடத்தில் அடைத்து வைத்திருக்கிறது.இவர்கள், இதுவரைக்கும் எங்குள்ளனர் என்பதும் பரமரகசியம்.

மின் ஆங்ஹிலெய்ன் தலைமையிலான மியன்மார் இராணுவ ஜூண்டா அரசாங்கம், கைது செய்யப்பட்டுள்ள ஆங்சாங் சூகி மீது 18 குற்றச்சாட்டுக்களை சுமத்தி உள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டால், 190 வருடங்கள் இவர் சிறை செல்ல நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 11 குற்றங்களே இதுவரை நிரூபிக்கப்பட்டுள்ளதாக மியன்மார் இராணுவ அரசாங்கம் கூறுகிறது.

### 190 வருடங்கள் சிறையிலடைக்கவும் சதியென சீற்றம்

ஏற்கனவே ஐந்து குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால், ஐந்து வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள இவருக்கு, இப்போது இன்னும் ஆறு குற்றங்கள் நிரூபணமாகி ஆறு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மீதியாக ஏழு குற்றங்கள் இருக்கின்றன. இவையும் நிரூபிக்கப்பட்டால் மொத்தம் 190 வருடங்கள் சிறை செல்ல நேரிடலாம்.

அந்தளவுக்கு மீதியாகவுள்ள குற்றங்கள் மிகப் பாரதூரமானவை எனச் சொல்லப்ப டுகிறது. அரச சொத்திலிருந்த 11 கிலோ தங்கத்தை குடும்பச் சொத்தாக்கியமை, சுமார் 600,000 அமெரிக்க டொலரை சுவீகரித்தமை, அரசியலுக்காக கிளர்ச்சியை தூண்டியமை இன்னும் எதிர்த் தரப்பு அரசியல் உள்ளிட்ட பலரை அதிகாரத்தால் அடிபணிய வைத்தமை உள்ளிட்டவை பிரதானமானவை. இதுபற்றி அறிவித்துள்ள மியன்மார் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பேச்சாளர். இந்த ஆறுவருடங்களை ஆங்சாங் சூகி சிறையிலேயே கழிக்க நேரிடும் என்றார்.

“ஏசியான்” அமைப்பின் அங்கத்துவ நாடுகள் மியன்மார் இராணுவ அரசை இந்த அமைப்பிலிருந்து நீக்கிவிடுமாறு பல கோரிக்கைகளை முன்வைத்து வந்த நிலையில், ஏசியான் அமைப்பிலிருந்து மியன்மார் தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதையடுத்து, அண்மையில் ஏசியான் அமைப்பின் செயலாளர் அண்மையில் மியன்மாருக்கு விஜயம் செய்து, அந்நாட்டின் இராணுவ தலைவர் மின்ஆங்ஹிலெய்னுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஜனநாயகத்தைநிலைநாட்டுவதற்கு 'ஏசியான்' அமைப்பு விதித்திருந்த ஐந்து செயன்முறைகள் ஒழுங்காக அமுல்படுத்தப்படுகிறதா?என்பதை பரிசிலீக்கும் வகையிலே இந்த விஜயம் அமைந்திருந்தது.

இந்தச்சந்திப்பில், மியன்மாரும் பல நிபந்தனைகளை முன்வைத்தது. மேலைத்தேய நாடுகளின் தேவையில்லாத தலையீடுகள் மியன்மாருக்கு வருவதை, ‘ஏசியான்’ அமைப்புதடுக்க வேண்டும் என்பது இதில் பிரதானமானதாகும்.

கல்முனை NET kalmunainet.com உண்மையின் முகம்

வெளியில் செல்லும் போது முகக் கவசம் அணிந்து செல்வோம்



Published by Kalmunainet Media Network (Pvt) Ltd. at Boundary Road, Kalmunai 01. on Satrday, 30. 04. 2022

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

